# தொழில் துறை

## பெருந்தொழில்

கொள்கை விளக்கக் குறிப்பு
**2019–2020**

## மானியக் கோரிக்கை எண்.27


# எம்.சி.சம்பத்
தொழில் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2019

# தொழில் துறை

# பெருந்தொழில்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019–2020

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1–14 |
| 1. | தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் | 15–40 |
| 2. | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 41–60 |
| 3. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 61–84 |
| 4. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 85–102 |
| 5. | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | 103–116 |
| 6. | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | 117–130 |
| 7. | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 131–142 |
| 8. | சர்க்கரைத் துறை | 143–155 |

# தொழில் துறை

# பெருந்தொழில்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019–2020

## முன்னுரை

தமிழ்நாடு இந்தியாவின் முன்னேறிய மாநிலங்களுள் ஒன்றாகும். நாட்டின் பொருளாதாரத்தில் இரண்டாவது பெரிய மாநிலமாக திகழ்வதுடன், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **8.4%** பங்களிப்பையும் தமிழ்நாடு அளிக்கிறது. தொழில்கள் பலவும் உயர்ந்து சிறக்கும் தமிழ்நாடு இந்திய தொழில் துறையின் உந்து சக்தியாகவும் நாட்டின் அதிகளவிலான தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களைக் கொண்ட மாநிலமாகவும் திகழ்கிறது. இங்கு நிலவும் தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழல் காரணமாக மோட்டார் வாகனங்கள், வாகன உதிரி பாகங்கள், ஜவுளி, தோல் பொருட்கள், இலகுரக மற்றும் கனரக பொறியியல் இயந்திரங்கள், பம்புகள் மற்றும் மோட்டார்கள், மின்னணு மென்பொருள் மற்றும் வன்பொருள் உற்பத்தி என துறைகள் தோறும் சிறப்பிடம் பெற்றுள்ளது. உலகப் புகழ்பெற்ற நிறுவனங்களான ஹுண்டாய், ஃபோர்டு, பியூஜியட், பி எம்

டபில்யு, டெய்ம்லர், கேட்டர்பில்லர், அசோக் லேலண்ட், டிவிஎஸ், நோக்கியா, ரெனால்ட் நிசான், ஃபாக்ஸ்கான், டெல்டா, டெல், சேல்காம்ப், சியட், மிச்சிலின், எம்ஆர்எஃப், கிரண்ட்போஸ் மற்றும் எல் அண்ட் டி போன்றவை தமது உற்பத்தித் தளங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன.

ஆசியாவிலேயே, தொழில் முனைவோர் மிகவும் விரும்பும் மாநிலங்களுள் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது. சமீப காலங்களில் வெளிவந்த பல்வேறு சுதந்திரமான ஆய்வுகள் தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சியை பறைசாற்றுவதாக அமைந்துள்ளன. உலகின் முன்னணி ஆலோசனை நிறுவனங்களுள் ஒன்றான பிராஸ்ட் & சலிவான், இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டிற்கான வளர்ச்சி, புதிய முயற்சிகள் மற்றும் தலைமைக் குறியீடு ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்திய மாநிலங்களுக்கான தரவரிசையை 2018–ஆம் ஆண்டில் வெளியிட்டது. முதலீட்டுத் திறன், அரசின் செயல்திறன், உட்கட்டமைப்பு, கணினிமயமாக்கல் உள்ளிட்ட 10 காரணிகளை கொண்டு அனைத்து மாநிலங்களும் தரவரிசையிடப்பட்டதில் தமிழ்நாடு இரண்டாமிடத்தையும், முதலீட்டுத் திறனில் முதலிடத்தையும் பெற்றது. இந்தியாவின் பழமையான சுதந்திரமான

பொருளாதார ஆய்வு அமைப்பான ‘தேசிய செயல்முறை பொருளியல் ஆய்வு குழு’ வெளியிட்ட **2018** ஆம் ஆண்டிற்கான முதலீட்டுத் திறன் குறியீட்டில் (N-SIPI) தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. பொருளாதார சூழல், திறன்மிக்க பணியாளர்கள், உட்கட்டமைப்பு, நிலம், அரசியல் நிலைத்தன்மை மற்றும் நிர்வாகத் திறன் ஆகிய **6** காரணிகள் அடிப்படையிலான இக்குறியீட்டில் தமிழ்நாடு, ஒரே ஆண்டில் நான்கு இடங்கள் முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது. பொருளாதார மற்றும் தொழில் துறையில் நமது மாநிலம் அடைந்துவரும் விரைவான முன்னேற்றங்களை இது காட்டுகிறது. பொது விவகாரங்கள் மையத்தால் வெளியிடப்பட்ட **2018**–ஆம் ஆண்டிற்கான பொது விவகாரங்கள் குறியீட்டில், சிறப்பான நிர்வாகத்தில் தமிழ்நாடு நமது நாட்டிலேயே இரண்டாவது மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தியா டுடே நாளிதழில் வெளியான **2018**–ஆம் ஆண்டிற்கான மாநிலங்களுக்கான தர வரிசையில், ஒட்டுமொத்த செயல்திறன் வரிசையில் தமிழ்நாடு முதல் இடம் பெற்றுள்ளது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு **2019** (GIM 2019) அடைந்த சிறப்பான வெற்றியே தமிழ்நாட்டில் ஒவ்வொரு நாளும் மேலும் சிறப்பு பெற்று வரும் தமிழ்நாடின் தொழில்

சூழலுக்கு சிறந்த சான்றாக அமைந்துள்ளது என்றால் மிகையல்ல. இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டு நிகழ்வு, உலகெங்கிலுமிருந்தும் தொழில் முதலீட்டாளர்களை ஈர்த்தது. குறிப்பாக ஜப்பான், தென்கொரியா, தைவான், பிரான்சு, அமெரிக்கா, ஜெர்மனி, பின்லாந்து போன்ற நாடுகளில் இருந்து தொழில் முனைவோர் பலர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மாநாட்டின் போது ரூ.3,00,431 கோடி அளவிற்கான முதலீட்டு உத்திரவாதங்கள் பெறப்பட்டுள்ளன. 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூ.2,42,160 கோடி முதலீட்டினை ஈர்த்த 2015–ம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் பெருவெற்றி இட்ட சிறப்பான அடித்தளத்தால் இரண்டாம் உலக முதலீட்டாளர் மாநாடும் தொடர்ந்து பெருவெற்றி அடைந்தது என்றால் மிகையல்ல.

அந்நிய நேரடி முதலீடுகளை (FDI) ஈர்ப்பதில் இந்தியாவில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 29,848 மில்லியன் அமெரிக்க டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்ததன் மூலம் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் நாட்டின் நான்காவது பெரிய

மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. **2018–19** ஆம் ஆண்டிலும், **2,613** மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீட்டினை ஈர்த்ததன் மூலம், தன்னுடைய சிறப்பான நிலையை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்தியாவின் முன்னணி ஏற்றுமதி மாநிலமாக திகழும் தமிழ்நாடு, **2017–18**ஆம் ஆண்டில் **29,794** மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு ஏற்றுமதி செய்து, சரக்கு ஏற்றுமதியில் நாட்டிலேயே மூன்றாவது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. வாகனங்கள், வாகன உதிரி பாகங்கள், ஜவுளி, தோல் பொருட்கள் மற்றும் மின்னணு பொருட்கள் ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதி பொருட்கள் ஆகும். இந்தியாவின் வாகன ஏற்றுமதியில் **45** விழுக்காடும், வாகன உதிரி பாகங்கள் ஏற்றுமதியில் **34** விழுக்காடும் மின்னணு பாகங்கள் ஏற்றுமதியில் **16** விழுக்காடும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

இந்திய அரசால் வெளியிடப்பட்ட தொழில்களுக்கான **2016–17**–க்கான ஆண்டு ஆய்வறிக்கையின் மூலம் தெரியவரும் புள்ளி விவரங்கள் தமிழ்நாட்டின் தொழில்துறை

வளர்ச்சியை பறைசாற்றுவதாக அமைந்துள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

**அ) தொழிற்சாலை பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை**

தமிழ்நாடு முழுவதும் 24 இலட்சத்திற்கும் மேற்பட்ட நபர்கள் தொழிற்சாலைகளில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தரவரிசையில் அடுத்து உள்ள மாநிலமான மகாராஷ்டிராவை விட 25 விழுக்காடு அதிகமாகும். அதனை கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

| மாநிலம் | பணியில் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை | தர வரிசை |
|---|---:|---|
| **தமிழ்நாடு** | **24,08,282** | **முதலிடம்** |
| மஹாராஷ்டிரம் | 19,26,154 | இரண்டாமிடம் |
| குஜராத் | 16,34,566 | மூன்றாமிடம் |
| கர்நாடகா | 10,65,021 | நான்காமிடம் |
| உத்திரப் பிரதேசம் | 10,12,882 | ஐந்தாமிடம் |

## ஆ) தொழிற்சாலைகளின் எண்ணிக்கை

நாட்டிலேயே அதிக எண்ணிக்கையாக 37,220 தொழிற் கூடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

| மாநிலம் | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | தர வரிசை |
|---|---|---|
| **தமிழ்நாடு** | **37,220** | **முதலிடம்** |
| மஹாராஷ்டிரம் | 27,010 | இரண்டாமிடம் |
| குஜராத் | 25,966 | மூன்றாமிடம் |
| உத்திரப் பிரதேசம் | 15,294 | நான்காமிடம் |
| கர்நாடகா | 13,344 | ஐந்தாமிடம் |

## இ) மூலதன முதலீடு

தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட மூலதன முதலீட்டில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. அவற்றின் விவரத்தை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| மாநிலம் | மூலதன முதலீடு (ரூபாய் இலட்சத்தில்) | தர வரிசை |
|---|---|---|
| குஜராத் | 8,14,54,084 | முதலிடம் |
| மஹாராஷ்டிரம் | 5,02,80,256 | இரண்டாமிடம் |
| **தமிழ்நாடு** | **4,02,55,907** | **மூன்றாமிடம்** |
| கர்நாடகா | 2,51,87,858 | நான்காமிடம் |
| உத்தரப் பிரதேசம் | 2,08,13,332 | ஐந்தாமிடம் |

## ஈ) மொத்த உற்பத்தி

தமிழ்நாடு தேசிய அளவில் தொழில் உற்பத்தியில் மூன்றாம் இடத்தில் உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| மாநிலம் | மொத்த உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) | தர வரிசை |
|---|---|---|
| குஜராத் | 12,22,20,075 | ஒன்று |
| மஹாராஷ்டிரம் | 10,74,97,036 | இரண்டு |
| **தமிழ்நாடு** | **7,65,52,431** | **மூன்று** |
| கர்நாடகா | 5,01,64,690 | நான்கு |
| உத்தரப் பிரதேசம் | 4,95,52,268 | ஐந்து |

**முதலீடுகளுக்கான முன்னணி மாநிலம்**

தொழில்கள் பலவும் உயர்ந்து சிறக்கும் தமிழ்நாடு, முதலீட்டாளர்களின் முன்னணித் தேர்வாக திகழ்வதற்கான காரணங்கள் பல, அவற்றுள் முதன்மையானவை சில பின்வருமாறு.

**1. நல் ஆளுகை**

இந்திய மாநிலங்களில் நல்ல ஆளுகை மிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. சிறப்பான சட்டம் ஒழுங்கும் அமைதியான சூழலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை பெரிதும் ஈர்க்கின்றன. ஏற்கனவே குறிப்பிட்டவாறு, சிறப்பான

நிர்வாகம் மற்றும் நல் ஆளுகை குறித்த பல்வேறு தரவரிசைகளில் சிறப்பான இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது.

## 2. முனைப்பு மிகு மாநிலக் கொள்கை

முதலீடுகளை ஊக்குவிக்கும் சிறந்த கொள்கைகளை வகுத்து செயல்படும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தொழிற் பூங்காக்களை உருவாக்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலம். 1991–ஆம் ஆண்டின் பொருளாதார தாராளமயமாக்கலுக்குப் பிறகு, 1992–ஆம் ஆண்டில் தமிழ்நாடு வகுத்த சிறப்பான தொழில் கொள்கை பெரியளவிலான மோட்டார் வாகன தொழில் நிறுவனங்கள் அமைய ஊக்குவிப்பாக இருந்தது. இதேபோல் 2003–ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட தொழில் கொள்கை, நோக்கியா, ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் மற்றும் ஃபாக்ஸ்கான் போன்ற மின்னணு முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வருவதற்கான தூண்டுகோலாக விளங்கியது. தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம், 2023–இன் குறிக்கோள்களை செயல்படுத்தும் வகையில், 2014–ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட தொழில் கொள்கை அதிக தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வண்ணம் பல்வேறு வகையான சலுகைகளை வழங்குவதோடு, தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதிகளில்

சிறப்பு கவனத்தையும் செலுத்துகிறது. தமிழ்நாடு வணிக எளிதாக்கல் சட்டம் மற்றும் ஒற்றை சாளர அனுமதி முறை ஆகியவை நமது மாநிலத்தில் புதிய தொழில்கள் தொடங்குவதை மேலும் எளிமைப்படுத்தியுள்ளன.

**3. சிறந்த உள்கட்டமைப்பு**

தமிழகத்தின் விரிவான மற்றும் உயர் தரமான உள்கட்டமைப்பு முதலீட்டாளர்களுக்கு ஒரு முக்கிய ஈர்ப்பாக உள்ளது. சிறப்பான சாலை மற்றும் இரயில் வசதி, 4 பெரிய துறைமுகங்கள், நான்கு சர்வதேச விமான நிலையங்கள் ஆகியவை மட்டுமின்றி சிறந்த நம்பகமான மின் இணைப்பு மற்றும் பகிர்மான அமைப்புகளுடன் கூடிய மின்மிகை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. மூன்று கடல்வழி தகவல் கம்பி வடங்கள் சென்னைக்கு அருகே தரையிறங்கும் இடங்களைக் கொண்டிருப்பதால் 14.8 tbps (tera bytes per second) திறன் கொண்ட மிக உயர்ந்த இணைப்பு கூடிய அகண்ட அலைவரிசையை தமிழ்நாடு வழங்குகிறது.

**4. மனித வளம்**

தமிழ்நாட்டில் உள்ள அதிக எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி

நிறுவனங்கள் தொழில்துறைக்கு தேவையான திறன்மிகு மனித வளத்தை பெருமளவில் கிடைக்கச் செய்கின்றன. மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு தரவரிசையில் தேசிய அளவில் மூன்றாம் இடத்தையும், தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது மிக குறைவான வறுமையையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. தொழிற்சாலை, நிர்வாகம் மற்றும் அதன் பணியாளர்களுக்கு இடையே சிறந்த தொழில் உறவையும் கொண்டு தொழில் வளர்ச்சிக்கு இணக்கமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

**5. நிலம்**

பொதுத்துறை நிறுவனங்களால் மேம்படுத்தப்பட்ட பல்வேறு தொழில் பூங்காக்களில் நியாயமான விலையில் தொழில்களுக்கு தேவையான வசதிகளைக் கொண்ட நிலங்களை கிடைக்கச் செய்வதில் அரசு மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இவற்றுடன், ஜப்பானிய முதலீட்டாளர்களால் மேம்படுத்தப்பட்ட மூன்று தொழிற் பூங்காக்கள் உட்பட சில தனியார் துறை பூங்காக்களும் நிறுவப்பட்டு தொழில் வளர்ச்சிக்கு உதவிபுரிகின்றன.

**6. வலுவான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்**

தமிழகத்தில் சிறந்து செயல்பட்டு வரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மாநிலத்தின் பெருந்தொழில் வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் ஆதாரமாக திகழ்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை பதிவு செய்வதற்கான புதிய எளிய வழிமுறையான 'உத்யோக் ஆதார்' பதிவு செய்துள்ள தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. சிறப்பான அடித்தளத்தைக் கொண்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு நம்பகமான துணையாக இருக்கும் சூழல் மற்றும் அவை பெற்றுள்ள சிறப்பான வளர்ச்சி பல புதிய பெரும் தொழில் நிறுவனங்களின் வருகைக்கு முக்கிய காரணியாக விளங்குகிறது என்றால் மிகையல்ல.

மாநிலத்தின் தொழில்மயமாக்கலை மேலும் துரிதப்படுத்துவதில் தமிழக அரசு முனைப்புடன் உள்ளது. பாரம்பரியமாக சிறந்து விளங்கி வரும் வாகன உற்பத்தி துறை போன்ற துறைகளின் வலுவான கட்டமைப்புகளை அடித்தளமாக கொண்டு வான்வெளி மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் உற்பத்தி போன்ற அதிதொழில்நுட்ப துறைகளில்

அடியெடுத்து வைக்கும் முயற்சிகளில் தமிழ்நாடு ஈடுபட்டு வருகிறது, தமிழ்நாட்டில் பாதுகாப்பு தொழில் பெருவழித்தட திட்டத்தின் (Defence Industrial Corridor Project) தொடக்கம் இதற்கு சரியான ஊக்கத்தினை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. சிறப்பான உள்கட்டமைப்பு நம் மாநிலத்தின் முக்கிய பலங்களுள் ஒன்றாக இருப்பதால், அதனை மேலும் வலுவாக்கி உலகத் தரத்திற்கு மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சென்னையில் அமையவிருக்கும் புதிய விமான நிலையம் இம்முயற்சியின் முதல்படியாக இருக்கும். முதலீட்டு வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றை பரவலாக்கிட பெருவழித்தட திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சியினை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. சென்னை – பெங்களூரு தொழில் பெருவழித்தட திட்டம் (Chennai Bengaluru Industrial Corridor Project) மற்றும் சென்னை– கன்னியாகுமரி தொழில் பெருவழித்தட திட்டம் (Chennai Kanyakumari Industrial Corridor Project) ஆகியன அடுத்த சில ஆண்டுகளில் மாநிலத்தின் பொருளாதார நிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2014–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொழில் கொள்கையின் முதன்மை இலக்குகளாகிய சிறப்பான செயல்திறன் மற்றும் போட்டித்திறன் மிக்க மாநிலம் என்ற நம்பகத்தன்மையுடன் உற்பத்தி துறை முதலீட்டிற்கு மிகவும் விரும்பப்படும் மாநிலமாக தமிழ்நாட்டை நிலை நிறுத்துதல், ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் கூடுதலாக உற்பத்தித்துறை முதலீடுகளை ஈர்த்தல் ஆகியவற்றை அடைவதில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் அவையின் நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களுக்கு (Sustainable Development Goals) ஏற்ப படித்த இளைஞர்களுக்கு தாராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டியதன் அவசியம், புவியியல் ரீதியில் சீரான சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் வளர்ச்சி உள்ளிட்ட, அடுத்த தலைமுறைகளின் நலனை கருத்தில் கொண்ட உயர்ந்த குறிக்கோள்களே தமிழ்நாடு அரசு தொழில்துறையின் கொள்கைகளுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

## 1. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (தொழில் வழிகாட்டி நிறுவனம்), தமிழகத்திற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 15.07.1992 அன்று இலாப நோக்கமற்ற சங்கமாக தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் மே 2019 வரை தொழில் துறை சார்ந்த 438 தொழில் திட்டங்கள் வாயிலாக ரூ.3.75 இலட்சம் கோடி அளவிலான முதலீடுகளை ஈர்த்துள்ளது. தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018–ன்படி ஒற்றைச் சாளர முறையில் தொழில் அனுமதிகளைப் பெற்று வழங்கும் சட்டப்பூர்வ முகமை நிறுவனமாக தொழில் வழிகாட்டி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

**நிறுவனத்தின் செயல்பாடுகள்**

தொழில் வழிகாட்டி நிறுவனம் கீழ்க்காணும் பணிகள் மூலம் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

- புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம் தொழில் முனைவோர்களுக்கு தேவையான விவரங்களை வழங்குதல்.
- முதலீட்டாளர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- தேவைப்படும் அனுமதிகளை ஒரே இடத்திலிருந்து கிடைக்க வழிவகை செய்யும் ஒற்றைச் சாளர முகமையாக செயல்படுதல்.
- தொழில் துறையினரின் குரலாகவும் தொழில் கொள்கை மேம்பாட்டுக்கான குரலாகவும் ஒலித்தல்.

## 1.1 முதலீட்டு மேம்பாடு

### 1.1.1 தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019

2015–ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இந்த ஆண்டு (2019) ஜனவரி திங்கள் 23, 24 ஆகிய நாட்களில் நடைபெற்றது. புதிய தொழில் முதலீடுகளுக்கான வாய்ப்புகளை முதலீட்டாளர்களுக்கு எடுத்துக் காட்டி புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும்பொருட்டு இம்மாநாடு நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் முதலீடு செய்வது குறித்த தொழில் கருத்தரங்குகள் மற்றும் முதலீட்டாளர் கூட்டங்கள் அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து, சிங்கப்பூர், தாய்லாந்து, சீனா, தென்கொரியா, தைவான் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்டது. மேலும், இதுபோன்ற கருத்தரங்குகள் மும்பை, அகமதாபாத், டெல்லி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களிலும் நடத்தப்பட்டன. இவை தவிர மாவட்டந்தோறும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–னை துவக்கி வைத்தார். இந்திய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள், 'தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2019'–ஐ வெளியிட்டார். மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்கள் நிறைவு நாளன்று சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். ஆஸ்திரேலியா, பிரான்சு, ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் கூட்டாளர் நாடுகளாக (Partner Countries) கலந்து கொண்டன. வெளிநாட்டு

தூதர்கள், தூதரக அலுவலர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பிரதிநிதிகள் பலர் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். உலகெங்கிலும் இருந்து வந்த சுமார் 9000 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டின் மூலம் 10.5 இலட்சம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையிலான ரூ. 3,00,431 கோடி அளவிற்கு தொழில் முதலீடுகள் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த முதலீடுகள் ஜப்பான், கொரியா, தைவான், ஜெர்மனி, பிரான்சு, பின்லாந்து, அமெரிக்கா, சீனா போன்ற பல நாடுகளிலிருந்து வரப்பெற்றுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 முதலீடுகளை ஈர்ப்பதில் பெருவெற்றி பெற்றுள்ளது என்றால் அது மிகையல்ல.

**2019–உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

| வ. எண் | துறை | புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | முதலீடு (ரூ. கோடிகளில்) |
|---|---|---|---|
| 1. | தொழில் துறை | 147 | 1,55,248 |
| 2. | தகவல் தொழில் நுட்பம் | 11 | 11,974 |
| 3. | எரிசக்தி | 16 | 48,200 |

| | | | |
|---|---|---|---|
| 4. | வீட்டுவசதி | 66 | 48,980 |
| 5. | சுற்றுலா | 8 | 642 |
| 6. | வேளாண்மை | 2 | 2,011 |
| 7. | உயர்கல்வி | 51 | 1,014 |
| 8. | பள்ளிக் கல்வி | 3 | 157 |
| | **மொத்தம்** | **304** | **2,68,226** |
| 9. | சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் | **12,360** | **32,205** |
| | | **மொத்தம்** | **3,00,431** |

தமிழ்நாடு அரசு மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்ட நிறுவனங்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கிடவும் முதலீடுகளை முழுமையாகப் பெறவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1. தமிழ்நாடு அரசு தொழில் துறையில் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு பிரிவு” ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு பல்வேறு துறைகள் சார்பாக மேற்கொள்ளும் பணிகளை ஒருங்கிணைக்கும் பணியையும் இதுதொடர்பான தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

2. திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க இணைய வழி கண்காணிப்புத் தளம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
3. தொழில் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 147 புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கிட 18 மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
4. மேலும், பிற 8 துறைகளின் சார்பில் கையொப்பம் இடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு அந்தந்த துறைகளின் அரசு செயலாளர்கள் முகமை அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
5. இந்த அலுவலர்கள், நிறுவனங்களுடன் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தி உரிய வழிகாட்டுதல்களை வழங்கிடுவர்.
6. அரசு தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்ட ‘அதிகாரக்குழு’ (Empowered Committee) புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்து பிரச்சனைகள் இருப்பின் தீர்வு காண உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

7. தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018–ன் படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட 'மாநில முதலீட்டு மேம்பாடு மற்றும் கண்காணிப்பு வாரியம்' மேற்படி பணிகளையும் முதலீட்டு ஒப்பந்தங்களின் முன்னேற்றத்தையும் ஆய்வு செய்து உரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ன் போது தொழில்துறையால் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் தற்போதைய நிலை**

| வ. எண் | புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரம் | திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 147 |
| 2 | கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ள திட்டங்கள் | 31 |
| 3 | ஒற்றைச் சாளர முறையில் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ள நிறுவனங்கள் / நிலம் கையகப்படுத்தியுள்ள நிறுவனங்கள் | 71 |
| 4 | நிலத்தைத் தேர்ந்தெடுக்கும் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்கள். | 30 |
| 5 | பணிகளை விரைவில் துவங்க வாய்ப்புள்ள நிறுவனங்கள் | 15 |

மேற்கண்ட திட்டங்களில் இதுவரை 22 திட்டங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். அரசின் தொடர் வழிகாட்டுதல்களே இத்தகு முன்னேற்றத்திற்குக் காரணம் என்றால் அது மிகையல்ல.

**1. 2 2018–2019-ல் பிற முதலீட்டுத் திட்டங்கள்**

தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 ல் தொழில் துறையால் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட 147 திட்டங்கள் மட்டுமல்லாது தொழில் வழிகாட்டி நிறுவனம் மேலும் 8 முதலீடுகளை ஈர்த்துள்ளது. இவை மூலம் ரூ.4,697 கோடி முதலீட்டில் 3,885 புதிய வேலை வாய்ப்புகள் ஏற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 3 திட்டங்களுக்குத் தேவையான அனுமதிகள் ஒற்றைச் சாளர முறை மூலம் வழங்கப்பட்டுள்ளது. பிற 5 திட்டங்கள் தொடர்பான பணிகளும் துவங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன.

**1.3 தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015–ன் மூலம் வரப்பெற்ற முதலீடுகள்**

தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015–ல் 6 துறைகள் சார்பில் கையொப்பமிடப்பட்ட 98 புரிந்துணர்வு

ஒப்பந்தங்கள் மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை சார்பில் கையெழுத்திடப்பட்ட 10,073 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவற்றில் முறையே 67 மற்றும் 5,813 தொழில் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. மேற்படி நிறுவனங்கள், தாம் உத்திரவாதம் அளித்த ரூ.1,04,961 கோடி முதலீட்டில் ரூ. 52,783 கோடியை இதுவரை முதலீடு செய்துள்ளதாகவும், இதன் மூலம் 1,60,140 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

தொழில் துறையின் சார்பாக கையொப்பமிடப்பட்ட 50 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ரூ.19,228 கோடி அளவிற்கு முதலீட்டு உத்திரவாதம் அளித்த 28 நிறுவனங்கள், தங்களது வணிக உற்பத்தியை தொடங்கி உள்ளன. இந்நிறுவனங்கள் தாம் உத்திரவாதம் அளித்த ரூ.17,309 கோடியை இதுவரை முதலீடு செய்துள்ளதாகவும், இதன் மூலம் 23,353 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளன. இவை தவிர, 9 திட்டங்கள் கட்டுமானப் பணிகள் நிறைவு பெறும் நிலையிலும், 5 திட்டங்கள் நிலம் கையகப்படுத்தும் நிலையிலும் உள்ளன. இந்த 14 நிறுவனங்கள், இதுவரை ரூ.12,280 கோடி முதலீடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளன.

## 1.4 முதலீட்டு வழிகாட்டுதல் பணிகள்

தொழில் வழிகாட்டி நிறுவனம் முதலீட்டுக்கான முடிவுகளை எடுக்க தேவையான தொழில் நுட்ப மனித வளம், பொருளாதார குறியீடுகள், துறை விவரங்கள், நில இருப்புகள் மற்றும் இதனை சார்ந்த அரசுத் துறைகள் ஆகிய சேவைகளை இந்த நிறுவனம் வழங்குகிறது. இதற்குண்டான விவரங்கள் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் வலைதளத்தில் பிரெஞ்சு, ஜப்பானிய, கொரிய மற்றும் சீன மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

## 1.5 தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018—ன்படி ஒற்றைச் சாளர வழிகாட்டுதல் சேவைகள்

தொழில் துவங்குவதை எளிதாக்கும் வகையில், தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018—ன்படி, தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் ஒற்றைச் சாளர முறையில் ரூ.10 கோடிக்கு மேல் முதலீடுகள் கொண்ட தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் வழங்க வழிவகை செய்யும் முகமை ஆகும்.

தொழில் துவங்குவதற்கான பல்வேறு அரசுத் துறைகளின் உரிய அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் வழங்கிட தனி இணையதள சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **02.11.2017** அன்று தொடங்கி வைத்தார்கள். இணைய வழி ஒற்றைச் சாளர முறை மூலம் **11** அரசுத்துறைகளின் மூலம் வழங்கப்படும் **24** வகை அனுமதிகள் மற்றும் சேவைகளைப் பெற்றிட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும், தேவையான உரிமக் கட்டணங்களை செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்முறை மூலம் **31.05.2019** வரை பெறப்பட்ட **69** விண்ணப்பங்களில் **39** விண்ணப்பங்களுக்கு, தேவையான அனைத்து அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 1.6 சர்வதேச ஒருங்கிணைப்பு குழுக்கள்

### 1.6.1 ஜப்பான்

தமிழ்நாடு அரசு அரசாணை (நிலை) எண் **15** தொழில் **(எம்.ஐ.பி.2)** துறை நாள் **09.01.2012**–ன்படி ஜப்பான் மற்றும் தமிழ்நாட்டு அரசுகளிடையேயான கூட்டுப் பணிக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு இதுவரை **8** முறை கூடி ஜப்பான் நாட்டு தொழில் நிறுவனங்களின் முதலீட்டு மேம்பாடு

சம்பந்தமாகவும், இடர்பாடுகள் ஏதும் இருந்தால் களையவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கூட்டுச் செயல்பாடு மற்றும் முதலீடு மேம்பாட்டுக்காகவும் தமிழ்நாட்டில் ஜப்பான் தொழில் நகரீயம் அமைக்கும் பணிகளுக்காகவும் ஜப்பான் அரசின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக்காக ஜப்பான் ஹிரொஷிமா மற்றும் கனகாவா மாநிலங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் ஜப்பானிய முதலீட்டுத் திட்டங்கள் ஏதேனும் இடர்பாடுகளைச் சந்தித்தால் அவற்றினை உடனுக்குடன் களைந்திட சென்னையில் உள்ள 'ஜப்பானிய வர்த்தகம் மற்றும் தொழில் சபை' (JCCIC) மற்றும் தமிழ்நாடு அரசு தொழில் துறையிடையே தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை, இதுபோல 12 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### 1.6.2 ஜெர்மனி

தமிழ்நாடு அரசு அரசாணை (நிலை) எண்.182 தொழில் (எம்.ஐ.பி2) துறை நாள் 21–12–2017–ல் ஜெர்மனி மற்றும் தமிழ்நாடு அரசுகளிடையே கூட்டுப் பணிக்குழு (JWC) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜெர்மனி நாட்டு நிறுவனங்களின் குறைகளை களைந்திடவும், சமூக வளர்ச்சி திட்டங்கள் சார்பான பிரச்சனைகள், கலாச்சாரம் மற்றும் கல்வி மேம்பாடு, முதலீடு செய்யும் சூழ்நிலை மேம்பாடு, வணிகச் சூழல், உள்கட்டமைப்பு போன்ற பல்வேறு பொருள்கள் தொடர்பாக விவாதிக்கப்படுகிறது. இந்த கூட்டுப்பணிக் குழுவின் முதல் கூட்டம் 2018–ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 8–ஆம் நாளன்று நடைபெற்றது.

### 1.6.3 தென் கொரியா

தமிழ்நாட்டிலுள்ள கொரிய நாட்டு நிறுவனங்களின் குறைகளை சரிசெய்யவும், வணிகச் சூழல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் ஒரு கூட்டுப் பணிக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 1.6.4. வணிகம் எளிதாக்குதல் நடைமுறைகள்

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் வணிகம் செய்யும் நடைமுறைகளை எளிதாக்க மேற்கொண்டு வரும் பணிகளை ஒருங்கிணைக்கும் முகமையாக தொழில் வழிகாட்டி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு, தொழில் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை எளிமையாக்கவும், தகவல் தொழில்நுட்பம் மூலம் நிர்வாகத்தை எளிமைப்படுத்துதல், பொறுப்புத்தன்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் நிர்வாகத் திறமையை மேம்படுத்துதல் போன்ற பல தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு **2018**–ஆம் ஆண்டில், வணிகம் செய்தலை எளிதாக்குதல் தொடர்பான **369** சீர்திருத்தங்களில் **354** சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து, சீர்திருத்த அமலாக்கத்தில் **95.9%** மதிப்பெண்களை பெற்றுள்ளது. ஒட்டுமொத்தமாக, தமிழ்நாடு **334.60 (90.4%)** மதிப்பெண்களைப் பெற்று '**சாதனையாளர் மாநிலங்கள்**' பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

### 1.6.5 செயல்பாட்டுத் திட்டம் 2019–2020

1. தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ன் நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின்படி, **தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2021** நிகழ்ச்சியினை நடத்துவதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகளை தொழில் வழிகாட்டி நிறுவனம் துவங்கவுள்ளது.

2. தற்போதைய ஒற்றைச்சாளர இணையதளம் மேலும் மேம்படுத்தப்பட்டு தற்போதுள்ள 24 சேவைகளுடன் 30 புதிய சேவைகளும் சேர்க்கப்பட்டு 54 சேவைகளை வழங்கிடும் வகையில் மேம்படுத்தப்பட்ட புதிய ஒற்றைச்சாளர இணையதளம் உருவாக்கப்படும்.

3. முதலீடு மேம்பாடு, திட்ட மேலாண்மை போன்ற துறைகளில் திறமை வாய்ந்த பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு தொழில் வழிகாட்டி நிறுவனம் பலப்படுத்தப்படும்.

4. தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு புதிய அலுவலக வசதி ஏற்படுத்தப்படும்.

**Blank**



தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை **– 2019**
உலக முதலீட்டாளர்கள் மாநாடு **– 2019**ல் வெளியிடப்பட்டது.




தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ன் துவக்க விழா



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு
உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் புரிந்துணர்வு
ஒப்பந்தங்களில் கையொப்பமிட்ட முதலீட்டாளர்கள்



24.01.2019 அன்று நடைபெற்ற தமிழ்நாடு
உலக முதலீட்டாளர்கள் மாநாடு– 2019 நிறைவு விழாவில் மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேருரை ஆற்றினார்கள்.




உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையொப்பமிடப்பட்ட ரூபாய் 14,071 கோடி மதிப்பிலான முதலீட்டில் 12,294 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 12 திட்டங்களுக்கு 27.02.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

## 2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

மாநிலத்தில் தொழிற்பூங்காக்களை நிறுவி விரைவான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971–ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. இது பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் சீரான தொழில் வளர்ச்சியினை கொண்டு வருவதை ஓர் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### 2.1 தொழில் பூங்காக்கள் / வளர்ச்சி மையங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உருவாக்குதல்

தெளிவான முன்னோக்கு வளர்ச்சிக்கான பார்வையோடு கடந்த 48 ஆண்டுகளில் சிப்காட் இதுவரை, 32,004 ஏக்கர் பரப்பளவில், 12 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த அனைத்து அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 21 தொழில் பூங்காக்கள் / வளர்ச்சி மையங்கள் மற்றும் இவற்றுள் 7 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் ஆகியவற்றை நிறுவி மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் வியத்தகு பங்களிப்பை வழங்கியுள்ளது.

தற்போதுள்ள சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களின் (சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட) விவரம் வருமாறு :

(பரப்பளவு ஏக்கரில்)

| | | |
|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை தொழில் வளாகம் மற்றும் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் | 1420.71 |
| 2 | ஓசூர் தொழில் வளாகம் | 2092.50 |
| 3 | புதுக்கோட்டை தொழில் வளாகம் | 421.10 |
| 4 | மானாமதுரை தொழில் வளாகம் | 492.07 |
| 5 | கும்மிடிப்பூண்டி தொழில் வளாகம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா | 1490.02 |
| 6 | தூத்துக்குடி தொழில் வளாகம் | 2308.73 |
| 7 | கடலூார் தொழில் வளாகம் | 2670.71 |
| 8 | இருங்காட்டுக்கோட்டை தொழில் பூங்கா மற்றும் காலணி (ம) தோல் பொருட்கள் சிறப்பு பொருளாதார மண்டலம் | 1843.65 |
| 9 | பிள்ளைப்பாக்கம் தொழில் பூங்கா | 1045.89 |

| | | |
|---|---|---|
| 10 | திருப்பெரும்புதூர் தொழில் பூங்கா மற்றும் மின்னணு / தொலைதொடர்பு வன்பொருட்கள் உயர் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலம் | **2377.09** |
| 11 | சிறுசேரி தகவல் தொழில் நுட்ப பூங்கா | **782.97** |
| 12 | நிலக்கோட்டை தொழில் வளாகம் | **381.16** |
| 13 | பர்கூர் தொழில் வளாகம் மற்றும் கிரானைட் தொழில்கள் சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலம் | **1389.70** |
| 14 | பெருந்துறை தொழில் வளர்ச்சி மையம் மற்றும் பொறியியல் துறை சிறப்பு | **2706.44** |
| 15 | கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையம் மற்றும் போக்குவரத்து பொறியியல் பொருட்கள் சிறப்பு பொருளாதார | **2014.36** |
| 16 | ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் மற்றும் மின்னணு / தொலைதொடர்பு வன்பொருட்கள் உயர் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலம் | **3160.19** |
| 17 | செய்யாறு தொழில் வளாகம் | **2426.44** |
| 18 | மப்பேடு தொழில் பூங்கா | **121.74** |
| 19 | தேர்வாய்கண்டிகை தொழில் பூங்கா | **1127.00** |
| 20 | (i) வல்லம் – வடகால் தொழில் பூங்கா | **1381.54** |
| | (ii) வானூர்தி பூங்கா – வல்லம் வடகால் | **250.00** |
| 21 | குருபரபள்ளி தொழில் பூங்கா | **100.22** |
| | **மொத்தம்** | **32,004.23** |

## 2.2 தொழில் பூங்காக்களில் முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு

சிப்காட் நிறுவனம் இதுவரை **2591** தொழில் நிறுவனங்களுக்கு **21,500** ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலமாக சுமார் ரூ.**1,13,630** கோடி முதலீட்டினை ஈர்த்து, சுமார் **6.40** இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. தொழில் நிறுவனங்களுக்காக **4,648** ஏக்கர் நிலம் ஒதுக்கீட்டுக்குத் தயாராக உள்ளது.

## 2.3 சிப்காட் தொழில் பூங்காக்களில் பெருந்தொழில் நிறுவனங்கள்

அரசின் சீரிய வழிகாட்டுதலோடு சிப்காட் நிறுவனத்தின் முற்போக்கு செயல்பாடுகளால் பல முக்கியப் பெருந்தொழில் நிறுவனங்களான திருவாளர்கள் ஆம்வே, அப்பல்லோ டயர்ஸ், அசோக் லேலண்ட், போஸ்க், பிரிட்டானியா, காக்னிசன்ட் டெக்னாலஜி, டெய்ம்லர், டெல், டெல்டா எலக்ட்ரானிக்ஸ், டெல்பி டிவிஎஸ், எய்சர் மோட்டார்ஸ், ஃபாக்ஸ்கான், குரோத் லிங்க், ஹுண்டாய், இந்தியா யமஹா, கோனே எலிவேட்டர், கேபிஆர் ஸ்பின்னிங் மில்ஸ், மகேந்திரா அண்டு மகேந்திரா, மேன்டோ–ஹெல்லா, மிஷ்லின் டயர்ஸ், நோக்கியா சீமென்ஸ், ரெனால்ட் நிசான், செய்ன்ட் கோபைன், சாம்சங், சான்மினா

மற்றும் வீல்ஸ் இந்தியா போன்ற பெருந்தொழில் நிறுவனங்களும் தங்களது தொழில் கூடங்களை சிப்காட் நிறுவனத்தின் பல்வேறு தொழில் பூங்காக்களில் நிறுவியுள்ளன.

சிப்காட் **2018–19** ஆம் ஆண்டும் மற்றும் அதன் தொடர்ச்சியாகவும், திருவாளர்கள் கெம்பிளாஸ்ட் சன்மார், பாலிஹோஸ், ரெங்கநாயகி பேப்பர்ஸ், ஸ்விங்டெட்டர், டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் மற்றும் பிற நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்துள்ளதன் வாயிலாக ரூபாய் **3,570** கோடி முதலீட்டினை ஈர்த்துள்ளதோடு நேரடி மற்றும் மறைமுகமாக **10,643** நபர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி உள்ளது.

## 2.4 உருவாக்கப்படவுள்ள புதிய தொழில் பூங்காக்கள்

சுமார் **8,785** ஏக்கர் பரப்பளவில் **11** புதிய தொழில் பூங்காக்களை நிறுவுவதற்காக வைப்பூர்–மாத்தூர் தொழில் பூங்கா (காஞ்சிபுரம் மாவட்டம்), மாநல்லூர் தொழில் பூங்கா (திருவள்ளூர் மாவட்டம்), மதுரை தொழில் பூங்கா (மதுரை மாவட்டம்), திண்டிவனம் தொழில் பூங்கா (விழுப்புரம் மாவட்டம்), மணப்பாறை தொழில் பூங்கா (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), பனப்பாக்கம் தொழில் பூங்கா (வேலூர் மாவட்டம்),

ஓசூர் தொழில் பூங்கா நிலை–III (கிருஷ்ணகிரி மாவட்டம்), தருமபுரி தொழில் பூங்கா (தருமபுரி மாவட்டம்), பாடலூர் தொழில் பூங்கா (பெரம்பலூர் மாவட்டம்), நெமிலி தொழில்பூங்கா (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் குருபரபள்ளி தொழில் பூங்கா (நிலை–II & நிலை–III) (கிருஷ்ணகிரி மாவட்டம்) ஆகிய இடங்களில் நிலஎடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றுள் திண்டிவனம் (720 ஏக்கர்) மற்றும் மணப்பாறை (1,077ஏக்கர்) பகுதியில் உருவாக்கப்படவுள்ள தொழிற்பூங்காக்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இப்பூங்காக்களுக்கான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆய்வு நிறைவு பெற்று சுற்றுச்சூழல் அனுமதி விரைவில் கிடைக்கப்பெறும். மேலும், மாநல்லூர் தொழில்பூங்காவைப் (706 ஏக்கர்) பெறுத்தவரை சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு ஆய்வு நடைபெற்று வருகிறது. மதுரை (1,478 ஏக்கர்) மற்றும் நெமிலி (229 ஏக்கர்) தொழிற்பூங்காக்களுக்கான நில எடுப்பு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

## 2.5 தென் மாவட்டங்களை தொழில்மயமாக்குதல்

மாநிலத்தில் சீரான தொழில் வளர்ச்சியினை உருவாக்கும் நோக்கில், தென் மாவட்டங்களான இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றில் சுமார் **14,090** ஏக்கர் பரப்பளவில் புதிய தொழில் பூங்காக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை சிப்காட் நிறுவனம் எடுத்து வருகின்றது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட **4,388** ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள **9,702** ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்துவதற்கான நிருவாக அனுமதி கோரும் முன்மொழிவுகள் பல்வேறு நிலைகளில் பரிசீலனையில் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் மணக்குடி தொழில் பூங்காவைப் பொறுத்தவரை நில எடுப்புப் பணிகள் முடிவடைந்து, சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆய்வு நடைபெற்று வருகிறது.

தென் மாவட்டங்களில் புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் தற்போதுள்ள மற்றும் புதிதாக வரவிருக்கின்ற சிப்காட் தொழிற்பூங்காக்களில் **50** விழுக்காடு மானிய விலையில் சிப்காட் நிலம் ஒதுக்கீடு செய்து வருகிறது. அந்த

வகையில் இதுவரை, **89** தொழில் நிறுவனங்களுக்கு **200** ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.6 சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம்

#### 2.6.1 உணவுப்பூங்கா நிறுவுதல்

சிப்காட் அதனுடைய பர்கூர், செய்யாறு, திண்டிவனம், மணப்பாறை மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து தொழில் பூங்காக்களினுள் **100**–லிருந்து **150** ஏக்கர் பரப்பளவில் தலா ஒரு உணவுப் பூங்காவை உருவாக்கிட முனைந்துள்ளது. இந்த பூங்காக்களில் சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளான குளிரூட்டப்பட்ட சேமிப்பு கிடங்கு, தரம் மற்றும் வரிசைப்படுத்துதல், சோதனை செய்தல், போன்ற இதர வசதிகள் தமிழ்நாடு வேளாண்மை பொருட்கள் விற்பனை வாரியம் மூலமாக அமைப்பதற்கு அவ்வாரியத்துக்கு சலுகை விலையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். உணவுப்பூங்காக்களை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

#### 2.6.2 தண்ணீருக்கான மாற்று வளம்

இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், ஒரகடம், பிள்ளைப்பாக்கம் மற்றும் வல்லம்–வடகால் ஆகிய தொழில்

பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற் சாலைகளின் தண்ணீர் தேவைக்கான மாற்று வளமாக, சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கோயம்பேட்டில் **10** MGD கொள்ளளவுத்திறன் கொண்ட மூன்றாம் நிலை சவ்வூடு பரவல் முறையில் (TTRO) தண்ணீர் பெறும் திட்டம், தொழிற் பூங்காக்களுக்கு நீரை எடுத்துச் செல்லும் குழாய் இணைப்புகளுடன் உருவாக்கி வரும் பணியானது, நிறைவு பெற்று விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிப்காட் நிறுவனமும் அதன் தொழிற்பூங்காக்களுக்காக கடற்கரையோர பகுதிகளில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

### 2.6.3 தண்ணீர் பாதுகாப்பு

சிப்காட் அதன் தொழிற்பூங்காக்களில் தண்ணீர் பாதுகாப்பு முறைகளான தண்ணீர் பாதுகாத்தல் / தண்ணீர் பயன்படுத்தலில் சிக்கனம் ஆகியவற்றை செயல்படுத்திடவும், அண்ணா பல்கலைக்கழகத்தின் நீர் வளத்துறை மற்றும் இந்திய தொழிற்கல்வி நிறுவனம் (IIT) சென்னை ஆகியவற்றின் மூலமாக தொழிற் பூங்காக்களின் உள்ளே மற்றும் சுற்றிலும் அமைந்துள்ள நீர் நீலைகளின் ஆதார பகுதிகளிருந்து

மறுசுழற்சி முறையில் தண்ணீர் பயன்படுத்துதல் குறித்தும் ஆராய முனைந்துள்ளது.

### 2.6.4 தொழிற்பூங்காக்களில் பசுமை

தொழிற்பூங்காக்களில் பசுமையைப் பேணிட, ஏற்கெனவே சாலையோர மரங்கள் நடப்பட்டு உள்ளது. மேலும், சிப்காட் சுமார் ரூ.10 கோடி செலவில் வனத்துறையின் மூலமாக கூடுதலாக 2,32,000 மரக்கன்றுகள் வளர்ப்பு திட்டம் தொடங்கி மரக்கன்றுகளை நடவும் அதன் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பராமரித்திடவும் உத்தேசித்துள்ளது. நாற்றங்கால் அமைக்கும் பணி 2019–2020–ல் செயல்படுத்தப்படுவதோடு, மொத்த மரக்கன்றுகளில் 10 விழுக்காடு மரக்கன்றுகள் 2019–2020–ஆம் ஆண்டிலேயே நட்டு முடிக்கப்பட்டு, மீதமுள்ள மரக்கன்றுகள் 2020–2021 ல் நடப்படும்.

### 2.6.5 ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா

சிப்காட் அதன் கடலூர் தொழில் பூங்கா நிலை–III இல் 304 ஏக்கர் நிலம் தென்னிந்திய ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு (SIMA) ஜவுளிப் பொருட்கள் உற்பத்தி மையம் அமைக்க ஒதுக்கீடு செய்துள்ளது. தென்னிந்திய ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்க நிறுவன செயல்பாட்டுக்கு முக்கிய

தேவையாக விளங்கும் தண்ணீரை வழங்குவதற்காக சிப்காட் கடலூர் தொழிற்பூங்கா நிலை-II லிருந்து நிலை–III க்கு ரூ.14.25 கோடி திட்ட மதிப்பீட்டில் குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கடலூர் தொழில்பூங்காவில் உள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவைக்காக நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை குடிநீரைக்கும் ஆலை அமைக்க முனைந்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், மணக்குடி கிராமத்தில் சுமார் 225 ஏக்கர் பரப்பளவில் ரூ.150 கோடியில் ஒருங்கினைந்த ஜவுளி பூங்கா சிப்காட் நிறுவனத்தால் நிறுவப்படும். இப்பூங்காவில் 30 ஜவுளி தொழில் நிறுவனங்கள் இடம் பெறும். இப்பூங்கா, கடலில் கலத்தல் மற்றும் கடல் நீரை குடிநீராக்குதல் ஆகியனவற்றைக் கொண்டிருக்கும். இதற்காக மாவட்ட அளவிலான கடலோர ஒழுங்குமுறை மண்டலக் குழு, கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி வழங்குவதற்கான பரிந்துரையை அளித்துள்ளதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டுப் பணியும் நடைபெற்று வருகிறது.

### 2.6.6 உள்கட்டமைப்பு வசதிகள்

திருப்பெரும்புதூர் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் சமாளிக்கும் நோக்கத்தோடு, ரூ.10.98 கோடி செலவில், 190 கனரக வாகனங்கள் நிறுத்தும் வகையில் சிப்காட் இருங்காட்டுக்கோட்டை தொழில் பூங்காவில் ஒரு கனரக வாகனம் நிறுத்தும் மையமும், ரூபாய் 10.20 கோடி செலவில் 240 கனரக வாகனங்கள் நிறுத்தும் வகையில் சிப்காட் வல்லம்—வடகால் தொழில் பூங்காவில் மற்றொரு மையமும் என இரண்டு கனரக ஊர்தி நிறுத்தும் மையங்களை சிப்காட் நிறுவி செயல்படுத்தி வருகிறது.

சிப்காட் நிறுவனத்தின் திருப்பெரும்புதூர் தொழில் பூங்காவில் ஆண்களுக்கான (400 நபர்கள்) ஒரு தங்குமிடம் பெண்களுக்கான (600 நபர்கள்) ஒரு தங்குமிடம் என தனித்தனியாக இரண்டு தங்குமிடங்கள் கட்டப்பட்டு அவை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் செயல்பாட்டில் உள்ள சுய உதவிக்குழுக்கள் மூலமாக செயல்படுத்தி பராமரித்து வருகிறது.

இதே போன்று, திருப்பூர் மாவட்டம் நெருப்பெரிச்சல் கிராமத்தில் ரூபாய் 8.54 கோடி செலவில் பெண்களுக்கான (600 நபர்கள்) தங்குமிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இத்தங்குமிடத்தை செயல்படுத்தி பராமரித்திட திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தினர் கண்டறியப்பட்டுள்ளனர். மேலும், ரூபாய் 10 கோடி மதிப்பீட்டு செலவில் ஆண்களுக்கான (400 நபர்கள்) தங்குமிடம் ஒன்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு திட்டத்தின் கீழ் ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்ட திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தில் கட்ட உத்தேசித்துள்ளது.

சிப்காட் தொழிற்பூங்காக்களைச் சுற்றிலுமுள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் தொழில் வளர்ச்சி மையத்தில் ஒரு திறன் மேம்பாட்டு மையம் கட்டப்பட்டு, ஒரகடம் சிப்காட் உற்பத்தியாளர்கள் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த சங்கம் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகளை குறிப்பாக வாகன உற்பத்தித்துறையில் அளிக்கும். இதே போன்று திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க்கண்டிகை தொழில் பூங்காவில்

ஏற்கெனவே உள்ள கட்டிடம், திறன் மேம்பாட்டு மையத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும், திறன் மேம்பாட்டு மையம் அமைப்பதற்காக திருவாளர்கள் நெல்லை சிறு மற்றும் குறு தொழிற்சாலைகள் சங்கம் (NELSTIA)–வுக்கு 0.50 ஏக்கர் நிலம் திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் தொழில் வளர்ச்சி மையத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.7 கூட்டாண்மை சமூக பொறுப்பு

கூட்டாண்மை சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ் சிப்காட் தொழிற்பூங்காவைச் சுற்றியுள்ள பொதுமக்களுக்காக சிப்காட், பள்ளி கட்டிடங்கள், குடி தண்ணீர் வசதி, மருத்துவ உபகரணங்கள், சாலைகள், சமூகக்கூடம் போன்ற பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நிதியாண்டு 2018–2019–ல் சிப்காட் கூட்டாண்மை சமூக பொறுப்பு திட்டத்திற்கான நிதியிலிருந்து ‘கஜா’ புயல் நிவாரணத்துக்காக ரூ.3 கோடி மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளது.

## 2.8 முகவாண்மை அமைப்பு செயல்பாடு

பெரிய, மிகப்பெரிய மற்றும் மிகமிகப் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு அரசின் பல்வேறு தொகுப்பு ஊக்க நிதியுதவி சலுகைகளை வழங்கும் தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாக (Nodal Agency) சிப்காட் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இதுவரை 30 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10,531.16 கோடி வழங்கியுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டில் மட்டும் 17 தொழில் நிறுவனங்களுக்கு 2183.09 கோடி வழங்கியுள்ளது.

## 2.9 நிதிச் செயல்பாடு

சிப்காட் நிறுவனம் தொடர்ந்து நல்ல நிதி நிலையில் செயல்பட்டு வருவதோடு 2005-2006-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அரசுக்கு பங்கு ஈவுத் தொகையையும் வழங்கி வருகின்றது. நிதியாண்டு 2017-2018-ல், இலாபமாக ரூபாய் 166.45 கோடியை ஈட்டியதோடு, இதுவரை இல்லாத உயர் அளவாக ரூபாய் 49.23 கோடியை (85 விழுக்காடு) அரசுக்கு பங்கு ஈவுத் தொகையாக வழங்கியுள்ளது. தணிக்கை

செய்யப்படாத நிதிக்கணக்குகளின் அடிப்படையில் **2018–2019** ஆம் ஆண்டுக்கான இலாபம் ரூபாய் **176.02** கோடியாக இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.



சிப்காட் தகவல் தொழில் நுட்பப் பூங்கா, சிறுசேரி



சிப்காட் தொழில் வளர்ச்சி மையம், பெருந்துறை

## 3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), கூட்டுத்துறை நிறுவனங்கள் மூலம் முதலீடுகளை ஈர்த்து, மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மற்றும் தொழில் மூலதன முதலீட்டை மேம்படுத்தவும், தமிழக அரசால் 1965-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தொழில் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை கண்டறியவும் மற்றும் அதனை செயல்படுத்தவும், டிட்கோ நிறுவனம் வழிவகை செய்து வருகின்றது.

டிட்கோ நிறுவனம், இரசாயனப் பொருட்கள், உரங்கள், மருந்து பொருட்கள், ஜவுளி, இரும்பு மற்றும் எஃகு, தானியங்கி உதிரி பாகங்கள், உணவு மற்றும் வேளாண்மை, மலர் வளர்ப்பு, பொறியியல், பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் தயாரிப்பு போன்ற உற்பத்தித் துறை சார்ந்த பல கூட்டுத்துறை நிறுவனங்களையும் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், உயிரி தொழில் நுட்ப பூங்காக்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை

ஏற்படுத்துதல் போன்ற உள்கட்டமைப்பு துறை சார்ந்த பல கூட்டுத்துறை நிறுவனங்களையும் நிறுவியுள்ளது.

டைட்டன் இன்டஸ்ட்ரீஸ், டான்பேஃக் இன்டஸ்ட்ரீஸ், மகிந்திரா வேர்ல்டு சிட்டி, தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் லிமிடெட், டைடல் பார்க் லிமிடெட், அசென்டாஸ் ஐ.டி. பார்க் (சென்னை) லிமிடெட், டைசல் பயோ பார்க் லிமிடெட், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், சென்னை வர்த்தக மையம், டான்ஃப்ளோரா உள்கட்டமைப்பு பூங்கா, தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை, டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட், எல் & டி ஷிப் பில்டிங் மற்றும் இந்தியன் ஆயில் எல்.என்.ஜி (LNG) பிரைவேட் லிமிடெட் போன்றவை, டிட்கோ நிறுவனத்தின் முக்கிய கூட்டுத்துறை நிறுவனங்களாகும்.

டிட்கோ நிறுவனத்தின் முதலீடான ரூ.503.29 கோடி (மார்ச் 2019 வரை) பெரும்பாலும் கூட்டு நிறுவனங்களில் பங்கு முதலீடுகளாகவும் மற்றும் நடப்புத் திட்டங்களில் முதலீடுகளாகவும் உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், காமராஜர் துறைமுகத்தில், ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் திறன் கொண்ட திரவ நிலை எரிவாயு இறக்குமதி முனையத் திட்டம் ஒன்றினை

ரூ.4,317 கோடி முதலீட்டில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் இந்தியன் ஆயில் நிறுவனம் இணைந்து இந்தியன் ஆயில் எல் என் ஜி பிரைவேட் லிமிடெட் என்ற கூட்டுத்துறை நிறுவனம் மூலம் நிறுவி உள்ளது. இந்த முனையம் மாநிலத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள், உரத் தொழிற்சாலைகள், இதர தொழிற்சாலைகள், போக்குவரத்து மற்றும் வீட்டு உபயோக தேவைகளுக்கான எரிவாயுவை விநியோகம் செய்யும். இத்திட்டத்தை மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள், மார்ச் 6, 2019 அன்று நாட்டிற்காக அர்ப்பணித்தார்.

டிட்கோ நிறுவனம், டைடல் நிறுவனம் மூலமாக இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் கிராமத்தில் வாலிநோக்கம் உப்பு உற்பத்தி வளாகத்தில் சூரிய தகடு மூலம் 10 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை செயல்படுத்தி உள்ளது. இத்திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 05.03.2019 அன்று தொடங்கி வைத்தார்கள்.

சென்னை தரமணியில், தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பச் சேவைக்கான சிறப்பு பொருளாதார மண்டலம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு சிறப்பு முதலீட்டு மண்டலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் டைசல் பயோபார்க்–III,

திருவள்ளூர் மாவட்டத்தில் பாலிமர் தொழில் பூங்கா மற்றும் செங்கல்பட்டு அருகில் மருத்துவ உபகரண உற்பத்தி பூங்கா போன்ற திட்டங்களை டிட்கோ நிறுவனம் தற்போது செயல்படுத்தி வருகின்றது.

திருவள்ளூர் மாவட்டத்தில் கனரக பொறியியல் உதிரிபாகங்கள் மையம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய முதலீட்டு மற்றும் உற்பத்தி மண்டலம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. மேலும், டிட்கோ, சென்னை பெங்களூரு தொழில் பெருவழித்தடம் மற்றும் சென்னை கன்னியாகுமரி தொழில் பெருவழித்தடம் திட்டங்களை மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

## 3.1 தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்கள்

### 3.1.1 டிரில் இன்ஃபோ பார்க் லிமிடெட்

சென்னை தரமணியில் 25.27 ஏக்கரில் ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையத்துடன் கூடிய தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான ஒரு சிறப்பு பொருளாதார மண்டலத்தை

ரூ.4,000 கோடி திட்ட மதிப்பீட்டில், டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃபிராஸ்ட்ரக்சர் நிறுவனத்துடன் (டிரில்) இணைந்து கூட்டுத்துறையில் டிட்கோ நிறுவனம் நிறுவி வருகின்றது. இதில் மொத்தம் 4.6 மில்லியன் சதுர அடி பரப்பளவில் 6 கட்டிடங்கள் (6 Towers) கட்டி முடிக்கப்பட்டு, அவை குத்தகைக்கு விடப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

இந்த தகவல் தொழில் நுட்பப் பூங்காவில், 47,000 தகவல் தொழில் நுட்பப் பணியாளர்களும், இதன் தொடர்புடைய தினசரி அலுவலக பணிகளுக்காக 5,000 பணியாளர்களும், பணிபுரிந்து வருகின்றார்கள். மேலும், ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையம் மற்றும் தங்கும் அறைகளுக்கான (Serviced Apartments) கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளது. தற்போது, உள் அலங்கார பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் டிசம்பர் 2019–ல் முழுமையாக நிறைவடையும்.

### 3.1.2 பாலிமர் தொழில் பூங்கா

திருவள்ளூர் மாவட்டம், வாயலூர் மற்றும் காட்டுப்பள்ளி கிராமங்களில் மத்திய அரசின் பாலிமர் தொழில் பூங்கா அமைக்கும் கொள்கையின்படி, பாலிமர் பொருட்கள் உற்பத்தி

பூங்கா ஒன்றினை, டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமான தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் என்ற நிறுவனத்தின் மூலம், டிட்கோ செயல்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வளாகம், பாலிமர் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் அமைக்க ஏதுவான உள்கட்டமைப்பு வசதிகள் உடையதாக இருக்கும்.

மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறை, இத்திட்டத்திற்காக ஒப்புதல் அளித்துள்ள ரூ.40 கோடி மானியத் தொகையில் ரூ.8 கோடியை தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் நிறுவனத்திற்கு அளித்துள்ளது.

சுற்றுச் சூழல் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக (CRZ), ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள இடத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை. எனவே வாயலூர் மற்றும் புழுதிவாக்கம் கிராமங்களில் 265.65 ஏக்கர் நிலம், இத்திட்டத்தை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது. அதன்படி, இந்நிலங்கள் திட்ட நிறுவனமான தமிழ்நாடு பாலிமர் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், நில மேம்பாட்டு பணிகளுக்கான ஒப்பந்த புள்ளிகள்

2019–ஜூன் மாதத்தில் கோரப்பட்டு, இத்திட்ட பணிகள் ஆகஸ்ட் 2019–ல் தொடங்கப்பட உள்ளது .

### 3.1.3 டைசல் உயிரித் தொழில் நுட்பப் பூங்கா–III

கோயம்புத்தூர் மாவட்டம், சோமையம்பாளையம் கிராமத்தில் அண்ணா பல்கலை கழக வளாகத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் தரைத்தளம் + 13 தளங்களுடன் 2.29 இலட்ச சதுர அடி கட்டிட பரப்பளவில் டைசல் உயிரி தொழில் நுட்ப பூங்கா–III-யினை, ரூ.55 கோடி திட்ட மதிப்பீட்டில், டிட்கோ மற்றும் டைடல் பார்க் நிறுவனங்கள் இணைந்து நிறுவி வருகின்றன. இதுவரை 10 தளங்களுக்கான கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டமானது நவம்பர் 2019–ல் நிறைவடையும்.

### 3.1.4 வானூர்திகள் உற்பத்தி சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம்

வானூர்தி உதிரிப் பாகங்கள் தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு தொழில் சார்ந்த நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் ஒன்றினை திருப்பெரும்புதூரில் அமைக்கப்பட்டு வரும் வானூர்தி பூங்காவில் டிட்கோ மற்றும் டைடல் பார்க் நிறுவனங்கள்

இணைந்து நிறுவி வருகின்றன. இது வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், வானூர்தி மின்னணுவியல் உதிரி பாகங்கள் தயாரிப்பு மையம், சிறப்பு மையம், திறன் மேம்பாட்டு மையம் மற்றும் பொது சேமிப்பு கிடங்கு ஆகிய வசதிகளை கொண்ட கட்டிட வசதியை உருவாக்கும் திட்டமாகும். இத்திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதற்கட்டம் 5 இலட்சம் சதுர அடி கட்டிட வசதியுடன் ரூ.180 கோடி முதலீட்டில் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டு, திட்டத்தை செயல்படுத்த திட்ட மேலாண்மை ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மேலும், முதற்கட்ட திட்டத்திற்கான கட்டுமான பணிகள் செப்டம்பர் 2019–ல் தொடங்கப்படும்.

### 3.1.5 தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம்

மத்திய அரசின் தேசிய உற்பத்தி கொள்கையின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தக

துறையானது இத்திட்டத்திற்கு, கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை (Techno Economic Feasibility Study) தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தை உருவாக்குவதற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தேவிப்பட்டினம், சித்தார்கோட்டை, புல்லங்குடி மற்றும் அத்தியூத்து கிராமங்களில் சுமார் 5,468 ஹெக்டேர் நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கட்டமைப்பு திட்டங்களை உருவாக்க ரூ.7,021 கோடி முதலீடு தேவைப்படும் என திட்ட அறிக்கையில் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான இறுதி ஒப்புதல் கோரி மத்திய அரசின் தொழிற் மேம்பாடு மற்றும் உள் வர்த்தக துறையிடம் கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இறுதி ஒப்புதல் கிடைக்கப் பெற்றப்பின் சுமார் 5 வருட காலத்தில் இத்திட்டப் பணிகள் முடிக்கப்படும்.

### 3.1.6 கனரக பொறியியல் உதிரிபாகங்கள் உற்பத்தி மையம்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் சுமார் 700 ஏக்கர் பரப்பளவில் ஒரு கனரக பொறியியல் உதிரிபாகங்கள் உற்பத்தி மையம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகளை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இத்தொழில் மையத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் எண்ணூர் காமராஜர் துறைமுகம் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களுடன் நேரடியாக இணைக்கும் சாலை வசதிகளை கொண்டுள்ளது.

இம்மையத்தை அமைப்பதற்காக, பொன்னேரி வட்டத்தில் உள்ள காட்டூர் மற்றும் இப்ரஹாம்புரம் கிராமங்களில் உள்ள 700 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்துவதற்கான நிர்வாக ஒப்புதலை தமிழக அரசு அளித்துள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கான ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இரண்டு கட்டங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமானது 400 ஏக்கர் நிலப்பரப்பிலும் மற்றும் இரண்டாம் கட்டமானது மீதமுள்ள 300 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்படும். மேற்படி, 400 ஏக்கர் நிலங்களும், மேய்க்கால் புறம்போக்கு வகையை சார்ந்து இருப்பதால், இதற்கு மாற்றாக, கரடிபுத்தூர் கிராமத்தில் உள்ள 279 ஏக்கர் அரசு புறம்கோக்கு நிலங்களையும், டிட்கோவிற்கு சொந்தமான காளஞ்சி கிராமத்தில் உள்ள 152 ஏக்கர் நிலங்களையும், ஆய்வு செய்து வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், முதல்

கட்டமாக 400 ஏக்கர் நிலப்பரப்பில் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 3.1.7 கிருஷ்ணகிரி சிறப்பு முதலீட்டு மண்டலம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 2,101 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு சிறப்பு முதலீட்டு மண்டலத்தை (Special Investment Region) டிட்கோ மற்றும் ஜிஎம்ஆர் இன்ஃபிராஸ்ட்ரக்சர் நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமான ஜிஎம்ஆர் கிருஷ்ணகிரி SIR என்ற நிறுவனத்தின் மூலம், பல கட்டங்களில் செயல்படுத்த உள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.08.2018 அன்று இத்திட்டத்தை தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 275 ஏக்கர் நிலப்பரப்பில் நுண்பொறியியல், தானியங்கி உதிரிபாகங்கள் மற்றும் மின்னணுவியல் சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் ரூ.212 கோடி திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தில் 3 ஆண்டு காலங்களில் சுமார் ரூ.500 கோடி அளவில் முதலீடு ஈர்க்கப்பட்டு, 5,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறும்.

### 3.1.8 சென்னை வர்த்தக மையம் விரிவாக்க திட்டம்

தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், ரூ.289 கோடி முதலீட்டில் 20,804 சதுர மீட்டர் பரப்பளவில் கூடுதல் கண்காட்சி இடத்தினைக் கட்டி, சென்னை வர்த்தக மையத்தை விரிவாக்கம் செய்ய திட்டமிட்டுள்ளது. இவ்விரிவாக்க திட்டத்தை செயல்படுத்துவதற்கு கூடுதலாக 9.13 ஏக்கர் நிலத்திற்கான முன் நுழைவு அனுமதியினை தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்திற்கு தமிழக அரசு அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.20 கோடி நிதியுதவி அளித்துள்ளது. திட்ட முன்தயாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுமான பணிகள் செப்டம்பர் 2019–ல் தொடங்கும்.

### 3.1.9 சென்னை–பெங்களூரு தொழில் பெருவழித்தடம் – பொன்னேரி தொழில் முனைய மேம்பாட்டுத் திட்டம்

சென்னை–பெங்களூரு தொழில் பெருவழித்தட திட்டம், தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் பெரு வழித்தடத் திட்டங்களில் ஒன்றாகும்.

சென்னை–பெங்களூரு தொழில் பெரு வழித்தட திட்டத்தை மாநிலத்தில் செயல்படுத்தும் முகமையாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழில் பெருவழித்தடத்தில் பல ஒருங்கிணைந்த சிறப்பு முதலீட்டு பகுதிகள் உருவாக்கப்படும். இத்தகைய சிறப்பு முதலீட்டுப் பகுதிகள் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடனும், சாலை மற்றும் இரயில் வழியாக சென்னை, எண்ணூர், காட்டுப்பள்ளி துறைமுகங்களுக்கு சரக்குகள் கொண்டு வருவதற்கான பிரத்தியேக வழித்தடங்களுடனும், மின்சாரம், பொது உள்கட்டமைப்பு வசதிகளுடனும் கூடிய தொழில் நகரியங்களாக உருவாக்கப்படும். இத்திட்டத்திற்காக ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கையினை (Comprehensive Integrated Master Plan) ஜப்பான் இண்டர்நேஷனல் கோ–ஆபரேஷன் முகமை (JICA) என்ற நிறுவனம் தயாரித்து முடித்துள்ளது. இத்தொழில் பெருவழித் தடத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில் முதலீட்டு பகுதிகளை உருவாக்குவதற்கான முன்னோக்குத் திட்டங்களை அடங்கியதாக இந்த பெருந்திட்டம் இருக்கும்.

இத்திட்ட அறிக்கையின் ஒரு பகுதியாக, இத்தொழில் பெருவழித்தட திட்டப்பகுதியில் தொழில் முனையங்களை அமைக்க மூன்று இடங்களை JICA நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது. இதில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி தொழில் முனையமும் ஒன்றாகும். பொன்னேரி தொழில் முனையம், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் **21,966** ஏக்கர் பரப்பளவு கொண்ட **10** கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். மத்திய அரசின் தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை, பொன்னேரி தொழில் முனைய திட்டப் பகுதியை ஒரு தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலமாக உருவாக்க கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

JICA தயாரித்துள்ள மேம்பாட்டுத் திட்டத்தின்படி பொன்னேரி தொழில் முனைய மேம்பாடு மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்படும். நில மதிப்பு உள்ளடங்கிய பொன்னேரி தொழில் முனையத்தின் முதல் கட்ட மேம்பாட்டு திட்டச் செலவு ரூ.**13,314** கோடி எனவும், மூன்று கட்டங்களின் மொத்த மேம்பாட்டுச் செலவு ரூ.**32,713** கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

டிட்கோ நிறுவனம் TNITDA சட்டம் 1997–யை திருத்துவதற்கான கருத்துருவை அரசிடம் சமர்பித்தது. இத்திருத்திய TNITDA சட்டம் 1997, ஜனவரி 18, 2019 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. Delhi Mumbai Industrial Corridor Development Corporation Ltd. (DMICDC) பரிந்துரையின்படி, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான திருத்தப்பட்ட நிறுவன கட்டமைப்பு இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளது. மாநில ஒத்துழைப்பு ஒப்பந்தம் (State Support Agreement) மற்றும் பங்குதாரர் ஒப்பந்தம் (Shareholders Agreement) விரைவில் கையெழுத்தாக உள்ளது.

### 3.1.10 மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் பூங்கா

டிட்கோ நிறுவனம் மத்திய அரசுடன் இணைந்து காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு அருகில் 330 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மருத்துவ உபகரண உற்பத்தி பூங்கா திட்டத்தை ரூ.220 கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்த உள்ளது. இந்த பூங்கா, மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் மண்டலம், உயிரி தொழில்நுட்பம் / உயிரி தகவல் மண்டலம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மண்டலம் மற்றும் அறிவு சார் மையம் போன்றவற்றை உள்ளடக்கியதாக

அமையும். இத்திட்டம் ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும். இச்சிறப்பு நோக்கு நிறுவனத்தில், டிட்கோ பத்து சதவீத பங்கு முதலீட்டை செலுத்தும். இத்திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்திடம் (TNIFMC) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்த நிதியுதவியை அளிக்குமாறும் TNIFMC கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### 3.1.11 உயிரி தொழில்நுட்ப தொழில் முதலீட்டு நிதி

மாநில அரசானது, உயிரி தொழில் நுட்ப தொழில் முதலீட்டு நிதியை உருவாக்கும் என தமிழ்நாடு உயிரி தொழில் நுட்ப கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரி தொழில்நுட்ப தொழில் முதலீட்டு நிதியை அமைக்கவும் மற்றும் நிர்வகிக்கவும் தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தை (TNIFMC) நிதி மேலாளராக நியமிக்க, தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், இந்த நிதியில் டிட்கோ நிறுவனம் ரூ.10 கோடியும், டைடல் மற்றும் டைசல் நிறுவனங்கள் இணைந்து ரூ.10 கோடியும் மாநில அரசு ரூ.5 கோடியும் பங்களிக்க உள்ளன. மீத பங்களிப்பு

வெளிச்சந்தையிலிருந்து பெறப்படும். இந்நிதியை உருவாக்க டிட்கோ நிறுவனம் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

### 3.1.12 சென்னை–கன்னியாகுமரி தொழில் பெருவழித்தடம்

சென்னை–கன்னியாகுமரி தொழில் பெருவழித்தடம் மாநிலத்தில் செயல்படுத்தும் முகமையாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை–கன்னியாகுமரி தொழில் பெருவழித்தடம் உற்பத்தி துறையில் மாநிலத்தின் பங்கை அதிகப்படுத்துதல், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் சமமான வளர்ச்சியை ஏற்படுத்துதல் மற்றும் தென் மாவட்டங்களில் வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு செயல்படுத்தபட உள்ளது. மத்திய அரசானது ஆசிய மேம்பாட்டு வங்கியுடன் இணைந்து துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு கடற்கரை பொருளாதார பெருவழித்திட்டத்தின் ஒரு பகுதியாக இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்திற்கான விரிவான மேம்பாட்டுத் திட்டம் (Comprehensive Development Plan) ஆலோசகர் நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பெருவழித்தடம்

மாநிலத்தின் 23 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும் மதுரை – திண்டுக்கல் – விருதுநகர் – தேனி, தூத்துக்குடி – திருநெல்வேலி, இராமநாதபுரம், கடலூர் – நாகப்பட்டினம், திருச்சி–புதுக்கோட்டை–சிவகங்கை, மற்றும் அரியலூர்–பெரம்பலூர் ஆகிய ஆறு தொழில் முனையங்கள் இத்திட்டத்திற்காக கண்டறியப்பட்டுள்ளன. இதில் மதுரை – திண்டுக்கல் – விருதுநகர் – தேனி, தூத்துக்குடி – திருநெல்வேலி, ஆகிய இரண்டு முனையங்கள் முதல் கட்டமாக செயல்படுத்தப்படும். துறைமுகம் சார்ந்த முக்கிய துறைகளான உணவு பதப்படுத்துதல், ஜவுளி, தானியங்கி ஊர்திகள், இரசாயன மற்றும் பெட்ரோலிய இரசாயனம், இயந்திர மின்னணுவியல் மற்றும் மின் சாதன உற்பத்தி துறைகளின் வளர்ச்சி இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### 3.1.13 தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் பெருவழித்தடம்

மத்திய அரசு 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் பாதுகாப்பு துறை சார்ந்த தொழில் பெருவழித்தடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை அறிவித்தது. இப்பெருவழித்திட்டம் ஓசூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய நகரங்களை இணைப்பதாக இருக்கும்.

இப்பெருவழித்தடமானது, தேவையான பரிசோதனை மற்றும் சான்றிதழ் வழங்குதல் வசதிகள், ஏற்றுமதி வழிவகை மையங்கள் தொழில்நுட்ப பரிமாற்ற வசதிகள் போன்ற வசதிகளை கொண்ட புதிய பாதுகாப்பு தளவாட உற்பத்தி பிரிவுகள் மற்றும் உற்பத்தி தொகுப்புகளை உருவாக்கும். இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து தமிழ்நாட்டில் உள்ள வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த சிறு நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுடன், அனைத்து இடங்களிலும் ஆலோசனை கூட்டங்களை மத்திய பாதுகாப்பு உற்பத்தித் துறையானது நடத்தியுள்ளது. அனைத்து கூட்டங்களிலும் தமிழக அரசு அதிகாரிகள் பங்கேற்று திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்கள். திருச்சிராப்பள்ளியில் **20.01.2019** அன்று மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களால் பாதுகாப்புத் தொழில் பெருவழித்தட திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை சார்ந்த பொது நிறுவனங்களும் மற்றும் தனியார் தொழிற் நிறுவனங்களும் ரூ.**3,123.50** கோடிக்கான முதலீட்டை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளனர். மாநில அரசு இப்பெருவழித்தட திட்டங்களை செயல்படுத்துவதற்கான

அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

### 3.1.14 சென்னைக்கு அருகில் புதிய விமான நிலையம்

மாநில அரசானது சென்னைக்கு அருகில் புதிய விமான நிலையத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30.09.2018 அன்று டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவின் போது இது குறித்த அறிவிப்பை வெளியிட்டார்கள். அரசு ஆணையின்படி, புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கான நடவடிக்கைகளை தொழில் துறை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தை இணைந்து செயல்படுத்துவதற்கான தனியார் தொழில் மேம்பாட்டாளரை தேர்ந்தெடுக்கும் பணியை டிட்கோ நிறுவனம் மேற்கொள்ளவும் மற்றும் இத்திட்டத்திற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்த அல்லது வாங்கும் பணியினை சிப்காட் நிறுவனம் மேற்கொள்ளவும் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, டிட்கோ நிறுவனம், சென்னைக்கு அருகில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக

ஆலோசகர் நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் நடவடிக்கையில் உள்ளது.

### 3.1.15 தகவல் தொழில் நுட்ப பூங்கா, பட்டாபிராம்

டைடல் பார்க் சென்னை நிறுவனம், ஆவடி தாலுகா, பட்டாபிராமில் 10 ஏக்கரில் முதற்கட்டமாக 5 இலட்சம் சதுர அடி பரப்பில் சுமார் ரூ.200 கோடி முதலீட்டில் ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு ASIDE நிதி ரூ.20 கோடி, அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கட்டிட வடிவமைப்பு மற்றும் விரிவான அறிக்கை தயாரிக்க ஆலோசகர் நிறுவனத்தை நியமித்துள்ளது. ஆலோசகர் நிறுவனமானது இத்திட்டத்திற்கான கட்டிட வடிவமைப்பு பணியினை முடித்துள்ளது. இத்திட்டத்தின் கட்டுமான பணிகள் செப்டம்பர் 2019–ல் தொடங்கும். இத்திட்டத்தின் மூலம் 5,000 பேர்கள் நேரடி வேலை வாய்ப்பை பெறுவார்கள்.

### 3.2 நிதிச்செயல்பாடு

டிட்கோ நிறுவனம், 2017–2018–ஆம் நிதியாண்டில் ரூ.52.13 கோடியை நிகர இலாபமாக ஈட்டி, அரசுக்கு

30 சதவீத ஈவுத் தொகையாக (Dividend) ரூ.21.61 கோடியை அளித்துள்ளது. 2018–2019 நிதியாண்டில், டிட்கோ நிறுவனம் ரூ.165.45 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.




இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம்  மாரியூர் கிராமத்தில்
10 மெகாவாட் சூரிய சக்தி உற்பத்தி மையத்தினை 05.03.2019 அன்று
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

## 4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

**1949–**ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் சர்க்கரை, சிமெண்ட், ஜவுளி, ஜவுளி இயந்திரம், பொறியியல், காகிதம் மற்றும் அலுமினியம் போன்ற பல முக்கிய தொழில் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இந்நிறுவனம் விளங்குகிறது. நாட்டில் மாநில நிதி கழகங்களின் (SFCs) முன்னோடியான இக்கழகம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது. இக்கழகம், தொழிற்கடன் வழங்கும் தனது செறிந்த அனுபவத்தினால் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி உதவிகள் அளித்து, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவித்து வருகிறது. இக்கழகம் அளித்து வரும் மொத்த நிதி உதவியில் **90** விழுக்காடுக்கு மேலாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் மொத்த நிதி உதவியில் **40** விழுக்காடு முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இந்நிறுவனம் **31.3.2019** வரை **1,23,544** நிறுவனங்களுக்கு ரூ.**17,281.26** கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. **31.03.2019** தேதி நிலவரப்படி, இந்நிறுவனம் வழங்கியுள்ள கடனில் நிலுவைத் தொகை ரூ.**1,166.07** கோடியாகும்.

தமிழக அரசு தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவினாலும் வழிக்காட்டுதலாலும், இக்கழகம் **2003–2004** ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த **16** வருடங்களாக நிகர இலாபம் ஈட்டி வருகிறது. **2018–19** ஆம் நிதியாண்டில், ரூ.**23** கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**4.1 பங்கு மூலதனம்**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) ரூ.**55** கோடி கூடுதல் மூலதனமாக அளித்ததன் விளைவாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கு மூலதனம் ரூ.**321** கோடியிலிருந்து ரூ.**376** கோடியாக உயர்ந்துள்ளது.

## 4.2 திட்டங்கள்

தொழில் முனைவோர்களின் பல்வேறுபட்ட நிதி தேவைகளை நிறைவு செய்ய, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. புதிய தொழிற்சாலை தொடங்கவும், ஏற்கெனவே இயங்கும் தொழிற்சாலைகளை விரிவாக்கவும், பொது காலக்கடன், தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS), உற்பத்தி / பதப்படுத்துதல் / கூலி அடிப்படையிலான வேலை நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம், எளிய நடைமுறை மூலதனத் திட்டம், காற்றாலை / சூரிய சக்தி திட்டம், இயந்திர நிதியுதவித் திட்டம், போக்குவரத்து வாகனக்கடன், மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடன் திட்டம் , கூட்டாண்மை கடன் திட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தமிழ்நாடு ஒலிபரப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஒப்பந்தகாரர்களுக்கான பட்டி நிதியுதவித் திட்டம் போன்ற பல திட்டங்களை இக்கழகம் செயல்படுத்துகிறது.

### 4.2.1 பொது காலக்கடன் (General Term Loan)

இக்கழகம், உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வதற்கும், நவீனமயமாக்குவதற்கும், உற்பத்தியைப் பன்முனைப்படுத்துவதற்கும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

பொது / தனி நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூ.30 கோடி வரையிலும், கூட்டு நிறுவனங்கள் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டு நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூ.20 கோடி வரையிலும் மற்றும் தனி உரிம நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூ.15 கோடி வரையிலும் வழங்கப்படுகிறது. தொழில் முனைவோரின் பங்களிப்பு மொத்தத் தொழில் மதிப்பீட்டில் 25 சதவீதம் முதல் 33.33 சதவீதம் வரை ஆகும். 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் கடன் அசல் தொகை திரும்ப செலுத்த விடுமுறை காலம் வழங்கப்படுகின்றது (இந்த விடுமுறை காலத்தில் வட்டியை மட்டும் செலுத்த வேண்டும்). கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம், திட்டங்களின் அடிப்படையில், விடுமுறை காலம் உள்பட 9 ஆண்டுகள் வரை இருக்கலாம். இத்திட்டத்தின் கீழ் 2018–19ஆம் ஆண்டில், 284 தொழில்

முனைவோருக்கு ரூ.194.01 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.2 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme - NEEDS)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு, தொழில் திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மூலதன மானியமாக மாநில அரசு வழங்கும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் வட்டியில் 3 சதவீதம் சலுகையும் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு சிறப்பு பிரிவினருக்கு அதாவது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கு 5 சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவீதமாகவும்

இருப்பது, இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இத்திட்டத்தின் கீழ், **31.03.2019** வரை **577** முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு ரூ.**271.51** கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.3 உற்பத்தி / பதப்படுத்துதல் / கூலி அடிப்படையிலான வேலை நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம் (Working Capital Term Loan for Manufacturing / Processing / Job Work units)

இத்திட்டத்தின் கீழ், உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்கள், நவீன அரிசி ஆலைகள் உட்பட நடைமுறை மூலதனத் தேவைகளுக்கான நடைமுறைக் காலக் கடன் மூலம் வழங்கும் நிதி உதவி திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நிறுவனம் ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ. **2** கோடி வரை கடனுதவி அளிக்கப்படுகிறது. கூலி அடிப்படையிலான வேலை (Job Work) நிறுவனங்களுக்கும் இது போன்ற நடைமுறை மூலதனத் திட்டத்தின் கீழ் ரூ.**50** இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், **2018-19**ஆம் ஆண்டில், **143** தொழில் முனைவோருக்கு ரூ.**52.43** கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.4 எளிய நடைமுறை மூலதனத் திட்டம் (Flexi Working Capital Term Loan)

உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களின் (அரிசி ஆலைகள் உட்பட) நடைமுறை மூலதனத் தேவைகளை / கூடுதல் நடைமுறை மூலதனத் தேவைகளை, இந்த எளிய நடைமுறைக் காலக் கடன் திட்டம் பூர்த்தி செய்யும். இத்திட்டத்தின் கீழ், அதிகபட்சமாக ரூ.2 கோடி வரை ஒரு நிறுவனத்திற்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

### 4.2.5 காற்றாலை / சூரிய சக்தி திட்டம் (Wind / Solar Power Project)

இத்திட்டத்தில் தொழில் முனைவோர்கள் தனியார் காற்றாலை / சூரிய சக்தி திட்டங்களை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்து அதனைத் தமது தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதோடு அல்லாமல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் விற்பனை செய்யவும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் நிலம், காற்றாலை / சூரிய சக்தி சார் மின் உற்பத்தி கருவிகள் வாங்குவதற்கும், காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படுகிறது.

### 4.2.6 இயந்திர நிதியுதவித் திட்டம் (Equipment Finance Scheme)

நடைமுறையில் திறம்பட செயல்படும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டினை தொழில் முனைவோர் தங்கள் பங்காக அளிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,311 நிறுவனங்களுக்கு ரூ.729.54 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.7 போக்குவரத்து வாகனக்கடன் (Transport Operators Scheme)

பொது உபயோகத்திற்கான சரக்குப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வழித்தட உரிமம் உள்ள பயணிகள் சீருந்துகள், பேருந்துகள் ஆகியவை வாங்க கடனுதவி வழங்கப்படுகிறது. இதில் தொழில் முனைவோரின் பங்களிப்பு 15 லிருந்து 30 சதவீதமாகும்.

### 4.2.8 மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடன் திட்டம் (Generator Loan Scheme)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSME) இத்திட்டத்தின் கீழ் மின்னாக்கிகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், தொழில்

முனைவோரின் பங்களிப்பு 10 சதவீதம் ஆகும். மின்னாக்கி கடன்களைத் தொழில் முனைவோர் மேலும் எளிதாக பெறுவதற்கேற்ப, பிணையச் சொத்து விதிகளையும் இந்நிறுவனம் தளர்த்தியுள்ளது.

### 4.2.9 கூட்டாண்மை கடன் திட்டம் (Corporate Loan Scheme)

எதிர்பாராத தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்ய கழகத்தின் சிறந்த வாடிக்கையாளர்களுக்கு இக்கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை கடனுதவி அளிக்கப்படுகிறது .

### 4.2.10 பட்டி நிதியுதவித் திட்டம் (Bill Financing Scheme)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு ஒலிபரப்பு நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவற்றின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன வழங்குபவர் / ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி நிதியுதவியினை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் ஒப்பந்ததாரர்களுக்கும் இத்திட்டத்தின்

கீழ், நிதியுதவி வழங்கப்படுகிறது. பிணைய சொத்து ஏதுமின்றி எளிதான விதிமுறைகளின் கீழ் இந்த பட்டி நிதியுதவி திட்டத்தில் விரைவில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், **2018–19** ஆம் நிதியாண்டில் **38** ஒப்பந்ததாரர்களுக்கு **ரூ.202.04** கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

### 4.3 மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநில அரசு மற்றும் மத்திய அரசு வழங்கும் கீழ்க்காணும் மானியங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

### 4.3.1 தமிழக அரசின் மானியம்

#### 4.3.1. 1 பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பின்தங்கிய பகுதிகளிலும், சிப்காட் / சிட்கோ தொழிற்பேட்டைகளிலும் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும் மற்றும் சிறப்பு துறை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது **25** சதவீதம் அதாவது அதிகபட்சமாக

ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும். தொழிற்சாலை விரிவாக்கத்திற்காக வாங்கப்படும் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பு ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களின் மதிப்பில் 25 சதவீதத்திற்கு கூடுதலாக இருக்கும் பட்சத்திலும் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கு பிந்தைய மூன்று ஆண்டின் சராசரி விற்றுமுதல் 25 சதவீதம் அதிகரிக்கும் பட்சத்திலும், அத்தகைய விரிவாக்கங்களுக்கும் இந்த மானியம் வழங்கப்படுகிறது. 2018–19ஆம் ஆண்டில், இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) ரூ.66.10 கோடியை 504 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

### 4.3.1. 2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி சலுகை வழங்கும் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன் பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி சலுகை வழங்கும் அரசு திட்டம் 2021–22 நிதியாண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட தொடக்கம் முதல் 31.03.2019 வரை ரூ.3429.79 கோடி கடன் இக்கழகத்தால் அனுதிக்கப்பட்டு, 3,314 நிறுவனங்களுக்கு ரூ.90.81 கோடி மானியம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்

கீழ், 2018–19 ஆம் நிதியாண்டில் தமிழக அரசு ரூ.23.60 கோடி மானியம் வழங்கியுள்ளது.

### 4.3.1.3 பெரு மற்றும் மிகப்பெரும் நிறுவனங்களுக்கான மானியங்கள் மற்றும் சலுகைகள்

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யாத ரூ.10 கோடி முதல் ரூ. 300 கோடி அளவிலான முதலீட்டு திட்டங்களுக்கு வழங்கப்படும் பின்வழங்கு மூலதன மானியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான உட்கட்டமைப்பு மானியம் மற்றும் மதிப்பு கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரியின் (VAT + CST) மீதான மென் கடன் (Soft Loan) போன்றவற்றை வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினை தமிழக அரசு 08.03.2019 ஆம் அன்று தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.85 தொழில் (எம்ஐஎப்2) துறை மூலம் நியமித்துள்ளது.

### 4.3.1.4 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்ட மானியம்

இந்த திட்டத்தின் மூலம், இக்கழகம் 2018–2019ஆம் ஆண்டில், மூலதன மானியமாக (Capital Subsidy) ரூ.4.95 கோடியை 69 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

### 4.3.1.5 மின்னாக்கி மானியம்

**19.03.2012** முதல் **125** KVA வரை திறன் கொண்ட மின்னாக்கிகளுக்கு மானியம் என்றிருந்ததை மாற்றி **320** KVA வரை திறன் கொண்ட மின்னாக்கிகளுக்கு இயந்திர விலையில் **25** சதவீதம் மானியம், நிறுவனம் ஒன்றுக்கு உச்சவரம்பு ரூ.**1.50** இலட்சத்திலிருந்து ரூ.**5** இலட்சமாக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இக்கழகம் **2018–19**ஆம் ஆண்டில், ரூ.**40** இலட்சம் மின்னாக்கி மானியமாக **25** நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

## 4.4 மத்திய அரசின் மானியம்

### 4.4.1 கடன் சார்ந்த மூலதன மானியம் (Credit Linked Capital Subsidy)

இத்திட்டத்தின் கீழ், அறிவிக்கப்பட்ட துறைகளில் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது **15** சதவீதம் மானியம் அதாவது அதிகபட்சமாக நிறுவனம் ஒன்றிற்கு ரூ.**15** இலட்சம் வழங்கப்படுகிறது. **2018–19**ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், இக்கழகம், ரூ.**7.42** கோடியை **134** நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

### 4.4.2 ஜவுளி மேம்பாட்டு நிதி மானியம் (Textile Upgradation Fund Subsidy) - மூலதன மானியம் (Capital Subsidy)

இத்திட்டத்தின் கீழ், தகுதியுள்ள இயந்திரங்களுக்கு 10%/15% மூலதன மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியம், நெசவு பதனிடுதல், நெசவு ஆலை, நூற்பாலை, ஆயத்த ஆடை, தொழில் நுட்ப ஜவுளி, சணல் பிரிவு போன்ற ஜவுளி துறை பிரிவுகளுள் தகுதியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் (MSME), குறு, சிறு மற்றும் நடுத்தர அல்லாத நிறுவனங்களுக்கும் (Non-MSME) வழங்கப்படுகிறது.

இக்கழகம் 2018–19 நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் வட்டி மானியமாக ரூ.8 இலட்சத்தை 12 நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

### 4.5 பிற திட்டங்கள்

### 4.5.1 காப்பீடு

கடந்த எட்டு ஆண்டுகளாக இக்கழகம் காப்பீட்டு வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. இக்கழகம் காப்பீடு ஒழுங்குபடுத்துதல் மற்றும் வளர்ச்சிக்கான ஆணையத்தில் (IRDAI) பதிவு செய்து, The New India Assurance

Company Ltd. இன் காப்பீட்டு முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் நிதியுதவியில் உருவாக்கப்படும் சொத்துக்களின் காப்பீட்டு கட்டணத்திற்கான தரகுத்தொகை (10% இருந்து 16% வரை) பெறுவதன் மூலம் இக்கழகம் **2018–19**ஆம் நிதியாண்டில், ரூ.**26.73** இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

**4.5.2 வைப்பு நிதி ( Fixed Deposits)**

வைப்பு நிதி பெறுவதற்காக ரிசர்வ் வங்கி / சிட்பி (SIDBI) வகுத்துள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வைப்பு நிதியை ஏற்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஏற்கும் வைப்பு நிதிக்கு தமிழக அரசால் உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. **31.03.2019** அன்று நிறுவன வைப்பு நிதி (Inter Corporate Deposits ரூ. **203.82** கோடி), கல்வி நிறுவனங்களின் வைப்பு நிதி (ரூ.**67.92** கோடி), கோயில்களின் வைப்பு நிதி (ரூ.**46.24** கோடி) மற்றும் பொது மக்களின் வைப்பு நிதி (ரூ.**19.55** கோடி) ஆகியவற்றை இக்கழகம் தனது வசம் வைப்பு நிதியாக கொண்டுள்ளது.

## 4.6 செயல்பாடு

இக்கழகத்தின் முக்கிய செயல்பாடுகளான கடன் அனுமதித்தல் மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் மே **2011** முதல் **31.03.2019** வரையிலான காலத்தில் புரிந்த சாதனைகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**(ரூபாய் கோடியில்)**

| **செயல்பாடுகள்** | **11.05.2011 – 31.03.2019** |
|---|---|
| கடன் அனுமதித்தது (பட்டி நிதியும் சேர்த்து) | 8,633.37 |
| கடன் வழங்கியது | 7,227.92 |

### 4.6. 1 2018–2019 ஆம் நிதியாண்டின் செயல்பாடு

**(ரூபாய் கோடியில்)**

| **விபரம்** | **எய்தப்பட்ட சாதனை** |
|---|---|
| கடன் அனுமதி தொகை | 698.60 |
| கடன் வழங்கும் தொகை | 512.23 |
| இயக்க இலாபம் | 52.00 |
| நிகர இலாபம் | 23.00 |

15 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் இக்கழகம் 2015–16 ஆம் ஆண்டில் ஈவுத்தொகை வழங்கியது. பின்னர் 2016–17 ஆம் ஆண்டும் ஈவுத்தொகை வழங்கியது. மேலும், 2017–18 ஆம் ஆண்டில் ரூ. 3.21 கோடி ஈவுத்தொகை வழங்கியது.

2018–19ஆம் நிதியாண்டில், இக்கழகம் அளித்த நிதியுதவியில், அதிகமாக பொறியியல், போக்குவரத்து வாகன பாகங்கள் (28.85%), ஜவுளி (7%), பாலிமர் (9.75%) மற்றும் உணவு பதனிடும் துறைகளில் (8.25%) உள்ள நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4.6.2 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கு**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | கடன் அனுமதி தொகை | வழங்கக்கூடிய தொகை |
|---|---|---|
| 2019–20 | 1,200 | 960 |
| 2020–21 | 1,400 | 1,150 |

**Blank**

## 5. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழக அரசு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை, கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்க, 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந்த ஆலையின் உற்பத்தி, ஆண்டொன்றுக்கு 90,000 டன் காகித உற்பத்தி திறனுடன் 1985 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் புகளூரில் (அலகு—I) துவக்கப்பட்டது. தற்போது ஆலையின் காகித உற்பத்தி திறன், நான்கு கட்டங்களில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆலையின் காகித கூழ் உற்பத்தியும், நாளொன்றுக்கு 1,180 டன் உற்பத்தி திறனுடையதாக பல்வேறு கட்டங்களில் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனம், தனது இரண்டாம் அலகை ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, தயாரிக்கும் ஆலையை 2016 ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவியது.

இதன் மூலம், இந்நிறுவனம் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தியில், இந்திய அளவில் மூன்றாம் இடம் வகிக்கிறது.

பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப, பல்வேறு வகையான உயர்ரக காகிதங்கள் மற்றும் அடுக்கு காகித அட்டைகளை, இந்நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருள்களை, இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவீதத்தை, உலகளவில் சுமார் 37 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம், அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில், இந்திய அளவில் முதன்மையாக திகழ்கிறது.

இந்நிறுவனம், காகித தயாரிப்பில் உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்புக் கழிவு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 900 டன் உற்பத்தி திறன் கொண்ட, சிமெண்ட் தொழிற்சாலையை, காகித ஆலை வளாகத்திற்குள் நிறுவியுள்ளது.

இந்நிறுவனம், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் சுய தேவைக்காக,

**103.62** மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் **30** மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது.

இந்நிறுவனம், தனது உற்பத்திக்கு தேவைப்படும் மூலப் பொருளினை பெறுவதற்கும், சுய தேவையை பூர்த்தி செய்வதற்கும், மரக்கூழ் வனத் தோட்ட திட்டத்தினை, **2004–05** ஆம் ஆண்டு முதன் முறையாக துவக்கியது. இத்திட்டம், பண்ணைக் காடுகள் மற்றும் மூலதனக் காடுகள் வளர்ப்பு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2019** ஆம் ஆண்டு, மார்ச் மாதம் வரையில், பண்ணைக்காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும், **1,30,561** ஏக்கரில் மூலதனக்காடுகள், **27,596** விவசாயிகளின் நிலங்களில் மரக்கூழ் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில், தமிழக அரசு **35.32** விழுக்காடு பங்கும், தமிழக அரசு சார்ந்த நிறுவனங்கள் **4.06** விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பரநிதிகள்,

கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் வசம் உள்ளது.

## 5.1 2018–2019-ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டு அளவு

- **காகித உற்பத்தி** : 4,32,572 டன்

  பயன்பாட்டு அளவு : 108 விழுக்காடு

  காகித ஆலை 2018–19 ஆம் ஆண்டில் 4,32,572 டன் காகித உற்பத்தி செய்து புதிய சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பு, 2015–16 ஆம் ஆண்டு, அதிகபட்சமாக 4,03,430 டன் காகித உற்பத்தி செய்தது.

- **காகித அட்டை உற்பத்தி** : 1,76,997 டன்

  பயன்பாட்டு அளவு : 88.5 விழுக்காடு

  காகித அட்டை ஆலை, 2018–19 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 1,76,997 டன் காகித அட்டை உற்பத்தி செய்துள்ளது. இதற்கு முன்பு, 2017–18 ஆம் ஆண்டு அதிகபட்சமாக 1,41,851 டன் காகித அட்டை உற்பத்தி செய்தது.

- **சிமெண்ட் உற்பத்தி** : **2,33,676** டன்

  சிமெண்ட் ஆலை **2018–19** ஆம் ஆண்டில் அதிகபட்சமாக **2,33,676** டன் உற்பத்தி செய்துள்ளது. சிமெண்ட் உற்பத்தி முந்தைய ஆண்டின் உற்பத்தியான **2,27,947** டன்னைவிட கூடுதலாகும்.

- **மொத்த மின் உற்பத்தி** : **8,219** இலட்சம் யூனிட்

**5.2 2018–2019-ஆம் ஆண்டின் விற்பனை மற்றும் இலாபம்**

**2018–2019**–ஆம் ஆண்டின், மொத்த வருவாய் ரூ.**4,122** கோடியாகும். இது முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் ரூபாய் **3,159** கோடியைவிட கூடுதலாகும்.

**2018–2019**–ஆம் ஆண்டின், வரிக்கு முன் இலாபம் ரூ.**155** கோடியாகும். **2018–2019**–ஆம் ஆண்டின், வரிக்கு பின் நிகர இலாபம் ரூபாய் **94** கோடியாகும்.

**5.3 ஈவுத்தொகை**

இந்நிறுவனம் ஆலையை இலாபகரமாகவும், திறமையாகவும் இயக்கி, தனது பங்குதாரர்களுக்கு தொடர்ந்து ஈவுத் தொகையை அளித்து வருகிறது. இந்நிறுவனம் **2017–18** ஆம் ஆண்டு இலாபத்தை ஈட்டவில்லை என்ற

போதிலும், **2017–18** ஆம் ஆண்டு ஈவுத்தொகையாக, **50** விழுக்காடு வழங்கியுள்ளது. அதன்படி, இந்நிறுவனம் தமிழக அரசுக்கு **2017–18** ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகையாக **ரூ.12.22** கோடியினை வழங்கியுள்ளது. **2018–19** ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகையாக **75** விழுக்காடு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 5.4 ஏற்றுமதி

**2018–19** ஆம் ஆண்டில், இந்நிறுவனம் **84,027** டன் அச்சு மற்றும் எழுது காகிதத்தையும், **2,386** டன் அடுக்கு காகித அட்டைகளையும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

### 5.5 வேலை வாய்ப்பு

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் **2,680** நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும், ஏறத்தாழ **3,000** நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்து வருகிறது.

### 5.6 அடுக்கு காகித அட்டை ஆலை (அலகு 2) விரிவாக்கத் திட்டம்

ஆலையின் அடுத்த கட்ட வளர்ச்சியாக, தமிழக அரசின் **2017–18** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையில்,

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள, இரண்டாம் அலகின் உற்பத்தித் திறனை, ரூபாய் 2,100 கோடி முதலீட்டில் அதிகரிக்க உள்ளது என்று அறிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, இந்த விரிவாக்க திட்டத்தினை துவக்க, மத்திய அரசின் சுற்றுச்சூழல் (MOEFCC) அனுமதி பெறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் இருந்து சுற்றுச்சூழல் அனுமதி 04.04.2019 அன்று பெறப்பட்டுள்ளது.

இந்த விரிவாக்க திட்டம் இரண்டு கட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ரூ.1,100 கோடி முதலீட்டில் மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு மற்றும் 20 மெகாவாட் மின்னாக்கி ஆகியவற்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முக்கிய இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மரக்கூழ் தயாரிக்கும் பிரிவினை நிறுவுவதன் மூலம், வெளிநாட்டில் இருந்து மரக்கூழ் கொள்முதல் செய்யப்படுவது தவிர்க்கப்படும்.

நிறுவனத்தின் அலகு–2 இல், ஆலை விரிவாக்கத் திட்டம் செயல்படுத்திய பின்னர், நிறுவனத்தின் மொத்த கூழ் மரங்களின் தற்போதைய தேவையான ஆண்டொன்றிற்கு 5 இலட்சம் டன்னிலிருந்து, 12 இலட்சம் டன்னாக உயரும். இதை கருத்தில் கொண்டு, 2018–19 ஆம் ஆண்டில் இருந்து மரக்கூழ் மரங்கள் நடவு திட்டத்தினை ஆண்டொன்றிற்கு 10,000 ஏக்கரில் இருந்து 25,000 ஏக்கர் நிலங்களில் பயிரிட நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, புதிய காகிதம் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் மின்னாக்கியை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், சுமார் 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

## 5.7 செயல்படுத்திய திட்டங்கள்

### 5.7.1 செயல் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தனது இரண்டாம் அலகில் அமைந்துள்ள அடுக்கு காகித அட்டை உற்பத்தி செய்யும் ஆலையின் தேவையினை கருத்தில்

கொண்டு, ஆலையின் வளாகத்திற்குள், தேய்ந்த உருளைகளை செப்பனிடும் இயந்திரத்தை ரூபாய் 30 கோடி முதலீட்டில் நிறுவியுள்ளது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 25.07.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**5.7.2 பணியாளர்கள் நலத் திட்டம்–பணியாளர்கள் குடியிருப்பு**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள பணியாளர்கள் குடியிருப்பு வளாகத்தில் பணியாளர்கள் நலன் கருதி, கூடுதலாக 80 குடியிருப்புகளை தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தால் ரூ.15 கோடி செலவில், ஜுன் 2018 இல் கட்டமைக்கப்பட்டது.

**5.8 செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்**

**5.8.1 சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்கானத் திட்டங்கள்**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் உள்ள காகித ஆலையின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச் சூழல் மாசைக் குறைத்தல், இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவில் மின்னியல் துகள்படிவு அமைப்பினை (Electro Static Precipitator Chamber)

விரிவாக்குதல் மற்றும் காகிதம் தயாரிக்கும் பிரிவில் தேய்ந்த அழுத்த உருளைகளை சீரமைத்தல் போன்ற பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் ஆகஸ்ட் 2019 இல் நிறைவடையும்.

**5.8.2 சுற்றுப்புறச் சூழல், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் மேம்பாட்டு திட்டங்கள்**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆலையின் சுற்றுப்புறச் சூழல், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் மேம்பாட்டு திட்டங்களை நிறைவேற்ற, ரூ.10 கோடி செலவில் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் ஜூலை 2019 இல் நிறைவடையும்.

**5.8.3 ஆலை மேம்பாட்டுத் திட்டம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை தாலுகா, மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள அடுக்கு காகித அட்டை ஆலையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கூடுதலாக காகித அட்டைகளை வெட்டும் இயந்திரம் மற்றும் வெட்டிய அட்டைகளை சுற்றி அடுக்கி வைக்கும் இயந்திரங்களை ரூ.15 கோடி செலவில் நிறுவத் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் டிசம்பர் 2019 இல் நிறைவடையும்.

**5.9 கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR)**

இந்நிறுவனம் வரிக்கு முந்தைய இலாபத்தில் 2 சதவீத இலாபத் தொகையினை சமுதாய நலப்பணிகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் செலவிட்டு வருகிறது. கல்வி, சுகாதாரம், கட்டுமானம், பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், குடிநீர் வசதி, கலாசாரம் மற்றும் மரபுகள் மேம்பாடு போன்ற சமுதாயப் பணிகளை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

இந்நிறுவனம் 2018–2019 ஆம் ஆண்டில் கூட்டாண்மை சமூகப் பொறுப்பிற்காக ரூ.4.06 கோடி செலவளித்துள்ளது.

2018 ஆம் ஆண்டில், கஜா புயலால் தமிழகத்தில் உள்ள டெல்டா மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் உள்ள மரங்கள் அடியோடு விழுந்தன. விவசாயிகளிடமிருந்து இடைதரகர்களை தவிர்ப்பதற்கு, இந்நிறுவனம் 19 தற்காலிக கூழ்மரக் கொள்முதல் நிலையங்களை திறந்தது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நியாயமான கொள்முதல் விலையை நேரடியாக வழங்க உறுதி செய்யப்பட்டது. தற்போது வரை, கஜா புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து, 1,12,000 டன் கூழ் மரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**5.10 விருதுகள்**

1. இந்திய உற்பத்திச் செலவு கணக்காயர்கள் நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு ‘15ஆவது உற்பத்தி செலவு மேலாண்மைக்கான விருது 2017’ என்ற முதன்மை விருதை, பொது நிறுவனங்களின் உற்பத்தி பிரிவில், அக்டோபர் 2018 இல் வழங்கியுள்ளது.

2. “நிலக்கரி சாம்பலை பயன்படுத்தியமைக்கான விருது 2018” என்ற விருதை Mission Energy Foundation, Maharashtra அமைப்பு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வழங்கி சிறப்பித்துள்ளது.

3. இந்திய தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry), சொராப்ஜி கோத்ரேஜ் பசுமை வணிக மையம், ஹைதராபாத் சிறந்த சுற்றுப்புற திட்டங்களை செயல்படுத்தியமைக்காக “சிறந்த புதுமையான உத்திகளை செயல்படுத்தியமைக்காக 2018–ஆம் ஆண்டிற்கான விருதை” ஜூன் திங்கள் சென்னையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

4. இந்திய வர்த்தக கூட்டமைப்பு (Indian Chambers of Commerce, Kolkata), 2018 ஆம் ஆண்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சிறந்த நீர் மேலாண்மைக்கான "Water Stewardship Award" என்ற விருதை வழங்கியுள்ளது.

5. இந்திய தொழில் துறையில், தொழில் முறைப் புதுமை, பொறியியல் செயல்பாடுகள் மற்றும் சேவைகளில் சிறந்து விளங்குவதற்கும், போட்டித் தன்மையில் சிறப்பாக செயல்படுத்தியதற்கும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, "தொழில் நுட்ப சிறப்பு விருது 2018" என்ற விருதை, கொல்கத்தாவில் உள்ள Institution of Engineers என்ற அமைப்பு வழங்கி சிறப்பித்துள்ளது.

6. இயக்குநர்கள் இன்ஸ்டிட்யூட், இந்தியா (Institute of Directors, India) என்ற நிறுவனம் துபாயில் நடந்த மாநாட்டில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, மதிப்பு மிக்க "தேசிய தரக்கட்டுப்பாட்டு தங்க மயில் விருதினை" 2018–19 ஆம் ஆண்டிற்கு வழங்கியுள்ளது.

**Blank**

## 6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

அரசுக்கு சொந்தமான டான்செம் நிறுவனம், அரியலூர் மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி திறன் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றையும், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி திறன் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றையும் இயக்கி வருகிறது. டான்செம், அரியலூரில் தற்போதுள்ள ஆலையின் வளாகத்தில் புதிய தொழில்நுட்பத்துடன் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் உற்பத்தி திறன் கொண்ட ஒரு நவீன சிமெண்ட் ஆலையை அமைத்து வருகிறது. இதனால், டான்செம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த சிமெண்ட் உற்பத்தி வருடத்திற்கு 17 இலட்சம் டன்னாக உயரும். இம்மூன்று ஆலைகளும், பின்தங்கிய மாவட்டங்களான அரியலூர் மற்றும் விருதுநகரில் அமைக்கப்பட்டுள்ளதால், அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி வருகின்றது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மற்றும் பிற அரசு துறைகளுக்கு சந்தை விலையை விட மிக குறைந்த விலையில்

சிமெண்ட்டினை டான்செம் நிறுவனம் வழங்கி வருகிறது. 2018–19 ஆம் ஆண்டில், டான்செம் நிறுவனத்தின் மொத்த சிமெண்ட் உற்பத்தியான 5.50 இலட்சம் டன்னில் சுமார் 74 சதவீதம் அதாவது 4.07 இலட்சம் டன் சிமெண்ட்டை டான்செம் அரசு துறைகளுக்கு வழங்கியுள்ளது. இதில் 488 டன் சாதாரண போர்ட்லேண்ட் சிமெண்ட் (OPC) மற்றும் 4,06,792 டன் பொசிலோனா போர்ட்லேண்ட் சிமெண்ட் (PPC) ஆகும். சந்தையில் OPC–ன் விலை மூட்டை ஒன்று சுமார் ரூபாய் 405 ஆகவும், PPC–ன் விலை மூட்டை ஒன்று சுமார் ரூபாய் 395 ஆகவும் நிலவி வரும் நிலையில், டான்செம் நிறுவனம் OPC மற்றும் PPC மூட்டை ஒன்றின் விலைகள் முறையே ரூபாய் 298 மற்றும் 285 ஆக குறைவான விலையில் நிர்ணயித்து, அரசு துறைகளுக்கு வழங்கி வருகிறது. இதன் மூலம், அரசு துறைகள் நலத்திட்டங்களை பயனுள்ள முறையில் செயல்படுத்த டான்செம் உறுதுணையாக உள்ளது.

### 6.1 அரியலூர் சிமெண்ட் ஆலை விரிவாக்கம்

டான்செம் நிறுவனம், அரியலூர் சிமெண்ட் ஆலை வளாகத்தில் ரூபாய் 809.09 கோடி திட்ட மதிப்பில் ஆண்டிற்கு 10 இலட்சம் டன் உற்பத்தி திறன் கொண்ட ஒரு புதிய

ஆலையை நிறுவி வருகிறது. திருவாளர்கள் லார்சன் அண்டு டியூப்ரோ என்ற நிறுவனத்தை EPC ஒப்பந்ததாரராகக் கொண்டு 19.05.2016 அன்று இவ்வாலை கட்டும் பணிகள் துவக்கப்பட்டன. தற்பொழுது புதிய ஆலை நிறுவும் பணிகள் ஏறக்குறைய நிறைவடைந்து, சோதனை ஓட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய ஆலையில் விரைவில் உற்பத்தி தொடங்கப்பட உள்ளது. நடப்பு நிதியாண்டில் இந்த புதிய ஆலையின் மூலம் சுமார் 5 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட உள்ளது. 2020–21 ஆண்டு முதல் புதிய ஆலையில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட உள்ளது. இதன் மூலம் டான்செம் நிறுவனத்தின் மொத்த சிமெண்ட் உற்பத்தி திறன் 2020–21 ஆண்டு முதல் 17 இலட்சம் டன்னாக உயரும்.

புதிய ஆலைக்கான திட்டப்பணிகள் முடிவுறும் நிலையில், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை பணியமர்த்த தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. புதிய ஆலையின் மூலம் சுமார் 250 நபர்கள் நேரடியாகவும் 1000 பேர் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெறுவர்.

### 6.2 ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நவீனமயமாக்குதல்

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனமயமாக்கும் நோக்கில் தகுதி வாய்ந்த ஆலோசகரைக் கொண்டு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### 6.3 அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்

பொதுமக்கள் பயன் பெறும் வகையில் மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 190 என்ற சலுகை விலையில் அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டத்தை, டான்செம் நிறுவனம் ஒருங்கிணைப்பாளராக இருந்து செயல்படுத்தி வருகிறது. இந்த விலையானது, தற்போதைய திறந்த வெளி சந்தை விலையான மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 405 என்பதை விட மிகவும் குறைவாகும். பொதுமக்களுக்கு மிக நன்மையளிக்கும் இத்திட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (PLF) ஆகிய துறைகளின் கீழ் இயங்கும் 501 கிட்டங்கிகள் மூலம் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், சொந்த வீடு கட்டும் ஒவ்வொரு பயனாளிக்கும் 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் 1,500

சதுர அடி வரை கட்டப்படும் வீடுகளுக்கு அதிகபட்சமாக **750** மூட்டைகள் வழங்கப்படுகிறது. மேலும் பழைய வீட்டினை பழுது பார்க்கவும் அல்லது புதுப்பிக்கவும் **100** மூட்டைகள் வரை பெறலாம்.

அம்மா சிமெண்ட் விற்பனை திட்டம் ஆரம்பித்த நாள் முதல் **30.06.2019** முடிய **42,12,936** டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு **12,98,511** நபர்கள் பயனடைந்துள்ளனர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் சூரிய ஒளிசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் (Solar Powered Green House Scheme) பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (PMAY) மற்றும் தனிநபர் இல்ல கழிப்பறை திட்டம் (IHHL) ஆகிய திட்டங்களுக்கும் அம்மா சிமெண்ட் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட அளவிலான அனைத்து அதிகாரிகளுக்கும் Tablet கணினி கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைக்கப்பட்ட விநியோக சங்கிலி மேலாண்மை என்னும் அமைப்பு ஒன்று (Highly Integrated Supply Chain Management System)

உருவாக்கப்பட்டு பயனாளிகளின் பதிவு, சிமெண்ட் விற்பனை, கட்டணம் செலுத்துதல், காத்திருப்போர் பட்டியல், திட்ட வாரியான உபயோகிப்பாளர் தகவல்கள், கிட்டங்கிகளின் சிமெண்ட் இருப்பு போன்ற முக்கிய தகவல்கள் தொகுக்கப்படுகின்றன.

## 6.4 அரசு துறைகளுக்கு சிமெண்ட் வழங்கும் திட்டம்

மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மேற்கொள்ளும் பணிகளுக்கு ஆண்டுக்கு சுமார் **9.32** இலட்சம் டன் சிமெண்ட் தேவைப்படுகிறது. இந்த தேவையில் சுமார் **43%** டான்செம் நிறைவு செய்கிறது. **2011–12** முதல் **30.06.2019** முடிய, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் ஏனைய அரசு துறைகளுக்கு டான்செம் சுமார் **77.8** இலட்சம் டன் சிமெண்ட் விநியோகம் செய்துள்ளது.

## 6.5 அரசு துறைகளுக்கு PPC விற்பனை தொடக்கம்

பொசலோனா போர்ட்லேண்ட் சிமெண்ட் **(PPC)** பயன்பாட்டால் ஏற்படும் சுற்றுச் சூழல் சாதகங்களை கருத்தில் கொண்டு, மாவட்ட ஊரக முகமை மற்ற ஏனைய அரசு துறைகளின் கட்டுமானப் பணிகளில் PPC சிமெண்டை

உபயோகப்படுத்துவதற்கான அரசாணை பெறப்பட்டது. அதனை தொடர்ந்து, டான்செம் **2018–19** ஆம் ஆண்டு **4,06,792** டன் PPC சிமெண்டை அரசு துறைகளுக்கு அரசு நிர்ணயித்த விலையில் வழங்கியுள்ளது. மேலும் **2019–20** ஆம் ஆண்டு **30.06.2019** தேதி வரை **80,214** டன் PPC சிமெண்டை டான்செம் அரசு துறைகளுக்கு வழங்கியுள்ளது.

**6.6 வெளிச்சந்தையில் சிமெண்ட் விற்பனை**

வெளிச்சந்தையில் நிலவும் சிமெண்ட் விற்பனை விலையைவிட சுமார் ரூபாய் **80** வரை குறைவான விலையில் டான்செம் பொதுமக்களுக்கு விற்பனை செய்துவருகிறது.

தனியார் சிமெண்ட் நிறுவனங்கள் வெளிச்சந்தையில் மூட்டை ஒன்று சுமார் ரூபாய் **405 (OPC)** மற்றும் சுமார் ரூபாய் **395 (PPC)** என்ற விலையில் விற்பனை செய்யும் நிலையில், டான்செம் மூட்டை ஒன்று ரூபாய் **325 (OPC)** மற்றும் ரூபாய் **315 (PPC)** என்ற நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. டான்செமின் இத்தகைய விற்பனை கொள்கை வெளிச்சந்தையின் விலையேற்றத்தை கட்டுக்குள் வைக்க உதவியாக உள்ளது.

கடந்த ஆண்டு **(2018–19)**, டான்செம் **1,42,997** டன் சிமெண்டை திறந்த வெளிச்சந்தையில் விற்பனை செய்துள்ளது. டான்செம் **2019–20** ஆம் ஆண்டு **30.06.2019** தேதியில் **51,060** டன் சிமெண்டை திறந்த வெளிச்சந்தையில் விற்பனை செய்துள்ளது.

அரியலூரில் நிறுவப்படும் புதிய ஆலை உற்பத்தி தொடங்கிய பின், வெளிச்சந்தையின் விற்பனை கணிசமான அளவிற்கு உயரும். திறந்த வெளிச்சந்தை விற்பனையை மேம்படுத்தவும், நிறுவனத்தின் மதிப்பை நிலை நிறுத்தவும் கீழ்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. **259** விற்பனை முகவர்கள் மற்றும் **43** ஒப்பந்ததாரர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
2. கேரளா மாநிலத்தில் சிமெண்ட் விற்பனை மீண்டும் துவக்கப்பட்டுள்ளது.
3. சிமெண்ட் மொத்த அளவு விற்பனை (Bulk sales) ஊக்குவிக்கப்படுகிறது.
4. அரசு சிமெண்டின் நன்மைகள் குறுஞ்செய்திகள் மூலம் உபயோகிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

## 6.7 கூட்டாண்மை சமூக பொறுப்பு (Corporate Social Responsibility)

**2016–17** ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி **110–ன்** கீழ் வெளியிட்ட அறிவிப்பின் படி, அரியலூர் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து டான்செம் நிறுவனம் ரூபாய் **13.52** கோடி செலவிலான கீழ்காணும் கூட்டாண்மை சமூக பொறுப்பு **(CSR)** நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது**:**

1. அரியலூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு **36,000** சதுர அடி பரப்பளவு கொண்ட புதிய கட்டிடம், பார்வையாளர்கள் காத்திருப்போர் அறை, நவீன சலவையகம், உள் மற்றும் புற நோயாளி பிரிவுகள் அமைத்தல், ஆய்வகம் தரம் உயர்த்துதல் மற்றும் மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்கள் வாங்குதல் உள்ளிட்ட பணிகளுக்கு ரூபாய் **9** கோடியே **50** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூபாய் **6** கோடியே **25** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2. அரியலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருக்கும் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில், கூடுதல் வகுப்பறைகள், ஆழ்துளை கிணறுகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் சிறுவர், சிறுமியருக்கான தனித்தனி கழிப்பறைகள் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூபாய் 2 கோடியே 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூபாய் 1 கோடியே 61 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

3. அரியலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல், கசிவு நீர் குட்டைகள் அமைத்தல், மழை நீர் சேகரிப்பு செய்தல் போன்ற பசுமை மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ரூபாய் 1 கோடியே 90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூபாய் 1 கோடியே 62 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய அனைத்து பணிகளுக்கும் மொத்தம் ரூபாய் 9.48 கோடி இதுவரை, செலவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

**6.8 சுரங்கங்களின் தற்போதைய நிலை**

டான்செம் ஆலைகளுக்கு தேவைப்படும் சுண்ணாம்புக்கல் தடையின்றி கிடைக்க வேண்டி, கீழ்க்காணும் தொலை நோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1) **1402.88.5** ஹெக்டேர் பரப்பளவில் உள்ள சுரங்கங்களுக்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) ஆனந்தவாடி சுண்ணாம்புக்கல் சுரங்கத்தின் உற்பத்தியை தற்போதைய அளவான வருடத்திற்கு **2.6** இலட்சம் டன்னிலிருந்து **15** இலட்சம் டன்னாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3) **8.61.0** ஹெக்டேர் மொத்த பரப்பளவு உள்ள இரண்டு லைம் கங்கர் சுரங்கங்களுக்கு குத்தகை உரிமம் பெறப்பட்டுள்ளது.

4) **97.25.0** ஹெக்டேர் பரப்பளவிளான சுண்ணாம்புக்கல் சுரங்கங்களுக்கு புதிய குத்தகை உரிமம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.9 டான்செம் நிறுவனத்தின் சாதனைகள்

### 6.9.1 செயல்திறன் மேம்பாடு

2017–2018–ஆம் ஆண்டில் அரியலூர் ஆலையில் ஒரு டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய **139.61** யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், சீரான செயல்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் **2018–19** ஆம் ஆண்டு அது **123.84** யூனிட் ஆக குறைக்கப்பட்டது. அத்துடன் **2017–18** ஆம் ஆண்டு **38%** ஆக **(1,59,595** டன்**)** இருந்த PPC சிமெண்ட் உற்பத்தி, **2018–19** ஆம் ஆண்டில் **89%**ஆக **(4,15,018** டன்**)** அதிகரிக்கப்பட்டது. **2017–18** ஆம் ஆண்டில் ஒரு டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய ரூபாய் **5,370.59** செலவாகிய நிலையில் மேற்கூறிய மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் **2018–19** ஆம் ஆண்டில் சிமெண்ட் உற்பத்தி செலவு ரூபாய் **3,647.91** ஆக குறைக்கப்பட்டு ரூபாய் **16.08** கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக **2018–19** ஆம் ஆண்டு ரூபாய் **14.42** கோடி நிகர இலாபம் ஈட்டி உள்ளது.

### 6.9.2 ஒருங்கிணைக்கப்பட்ட விநியோக சங்கிலி மேலாண்மை என்னும் அமைப்பு (Highly Integrated Supply Chain Management System) மற்றும் "வி கலெக்ட்" (V collect) முறை அறிமுகம்

அம்மா சிமெண்ட் விற்பனையை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட விநியோக சங்கிலி மேலாண்மை என்னும் அமைப்பு ஒன்று (Highly Integrated Supply Chain Management System) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இணையதளம் வாயிலாக அம்மா சிமெண்ட் திட்டத்தில், தொகையை முறையாக வசூலிக்கும் பொருட்டு 'வி கலெக்ட்' என்னும் முறை இந்தியன் வங்கி மூலம் சோதனை முறையில் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனாளிகள் வரைவோலைகளுக்கு பதிலாக தேசிய மின்னனு நிதி பரிமாற்றம் (NEFT) மூலம் தொகையை செலுத்த முடியும்.

### 6.10 ISO தர சான்றிதழ் பெறுதல்

தரமான உற்பத்தி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் விதமாக, ISO: **9001 – 2015** தர சான்றிதழ் பெறும் நடவடிக்கைகளை டான்செம் மேற்கொண்டு வருகிறது.

கூட்டாண்மை அலுவலகம் மற்றும் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு ISO தர சான்றிதழிற்கு BIS நிறுவனம் அனுமதி அளித்துள்ளது. ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கான ISO தர சான்றிதழ் பெறும் நடவடிக்கை நிறைவடையும் நிலையில் உள்ளது.

**6.11 நிதிச் செயல்பாடு**

டான்செம் சிமெண்ட் ஆலைகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயல்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக, கடந்த **2018–19**–ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்து அதன் மூலம் ரூபாய் **14.42** கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

இந்தியாவில் உப்பு உற்பத்தியில் முதன்மையாக திகழும் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாடு உப்பு நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கம் கிராமத்தில், தொழில் ரீதியாக பின் தங்கிய இம்மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் நோக்கில், 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம், வாலிநோக்கம் மற்றும் மாரியூர் ஆகிய கிராமங்களில் அடங்கியுள்ள 5,236 ஏக்கர் அரசு குத்தகைக்கு வழங்கியுள்ள நிலத்தில் உப்பு உற்பத்தி செய்து வருகிறது.

இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு அதன் வணிக ரீதியிலான தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தியைத் துவங்கியது. துவக்கத்தில் தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்து, தென்னிந்தியாவிலுள்ள குளோர் அல்கலி தொழிற்சாலைகளுக்கு வழங்கி வந்தது. அதனைத் தொடர்ந்து, செறிவூட்டப்பட்ட உப்பு அதாவது இரும்புச் சத்துக் கலந்த உப்பு, அயோடின் கலந்த உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு போன்றவற்றை உற்பத்தி செய்து, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மதிய உணவுத் திட்டம்,

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், பொது விநியோகத் திட்டம் போன்றவற்றிற்கு வழங்கி வருகிறது. இந்நிறுவனம், 1,210 தொழிலாளர்களுக்கு நேரடியாகவும் மற்றும் சுமார் 300 தொழிலாளர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

## 7.1 குறிக்கோள்

(i) வேலை வாய்ப்பு மிகவும் குறைந்த பகுதியான கடலாடி வட்டத்தில் வேலை வாய்ப்பினை உருவாக்கி அப்பகுதி மக்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

(ii) இப்பகுதியில் உப்பு உற்பத்திக்கு உகந்த சூழல் நிலவுவதால் கடல் நீரை பயன்படுத்தி உப்பு மற்றும் உப்பின் உடன் விளைப் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்தல்.

(iii) இரும்பு மற்றும் அயோடின் சத்து குறைபாட்டினை கட்டுப்படுத்தி, அவைகளை களையும் பொருட்டு நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கிய இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை நியாய விலையில் வழங்குதல்.

### 7.2 நிறுவனத்தின் செயல்பாடுகள்

#### 7.2.1 தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி

இந்நிறுவனம், கடல் நீரை பயன்படுத்தி, ஆண்டிற்கு சுமார் 2 இலட்சம் டன் தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்கின்றது. இவ்வுப்பு தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள முக்கியமான குளோர் அல்கலி தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள முக்கிய உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலைகள், சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு உற்பத்திக்காக இந்நிறுவனத்திடமிருந்து உப்பை கொள்முதல் செய்கின்றது.

#### 7.2.2 செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி

தமிழ்நாடு உப்பு நிறுவனம், பொது மக்கள் குறைந்த விலையில் வாங்கி பயன்பெறும் பொருட்டு, அயோடின் கலந்த அம்மா கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த அம்மா தூள் உப்பு மற்றும் அம்மா இருவித (இரும்பு மற்றும் அயோடின்) செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை பொது விநியோகத் திட்டம் மற்றும் வெளிச்சந்தையில் விநியோகம் செய்கின்றது.

### 7.2.3 அம்மா அயோடின் கலந்த கல் உப்பு

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ஒரு மணி நேரத்திற்கு 20 டன் உற்பத்தித் திறனுடைய அயோடின் கலந்த உப்பு உற்பத்தி செய்யும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதத்திற்கு, சுமார் 3500 டன் அயோடின் கலந்த அம்மா கல் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

### 7.2.4 அம்மா இருவித செறிவூட்டப்பட்ட உப்பு

இரும்புச்சத்து பற்றாக்குறைவினால் வரும் இரத்த சோகை நோயினை களைந்திடுவதற்காக, தமிழ்நாடு உப்பு நிறுவனம், இருவித செரிவூட்டப்பட்ட (இரும்பு மற்றும் அயோடின் ஆகிய நுண் ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட உப்பு) உப்பினைத் தயாரிக்கிறது. 2000 ஆம் ஆண்டு முதல் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களுக்கு தமிழ்நாடு உப்பு நிறுவனம் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை வழங்கி வருகிறது. இந்நிறுவனம் ஒரு மணி நேரத்திற்கு 3.6 டன் உற்பத்தித் திறனுடைய இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்யும் இயந்திரத்தினை டாடா டிரஸ்ட், மும்பை அவர்களின் நிதி உதவியுடன் நிறுவியுள்ளது.

## 7.3 விற்பனை செயல்பாடுகள்

**2017–2018** மற்றும் **2018–2019**–ஆம் ஆண்டுகளின் தொழிலக தரமுடைய உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றின் விற்பனை செயல்பாடுகள் ஒப்பீட்டிற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**(அளவு டன்னில்)**

| **வ. எண்** | **பொருட்களின் பெயர்** | **2017–18** | **2018–19** |
|---|---|---|---|
| **1** | தொழிலக தரமுடைய உப்பு | **1,67,176** | **1,95,863** |
| **2** | அயோடின் கலந்த கல் உப்பு | **17,230** | **19,622** |
| **3** | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு | **6,652** | **5,037** |
| **4** | இருவித செறிவூட்டப்பட்ட உப்பு | **2,773** | **8,417** |

தொழிலக தரமுடைய உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றின் விற்பனை முந்தைய ஆண்டைவிட முறையே **17.15%** மற்றும் **24.0%** அதிகரித்து உள்ளது. அம்மா உப்பு அறிமுகப்படுத்தப்பட்ட ஜூன் **2014** முதல் **30.06.2019** வரை **1,06,825** டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 7.4 உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ஒரு மணி நேரத்திற்கு 7 டன் உற்பத்தித் திறனுடைய சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை தமிழ்நாடு உப்பு நிறுவனம் நிறுவியுள்ளது. இந்நிறுவனம், **2018–19** ஆம் ஆண்டு **5270** டன் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் **3350** டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்துள்ளது.

## 7.5 முக்கிய சாதனைகள்

1. இந்நிறுவனம், **2018–19** ஆம் ஆண்டில் **1,87,664** டன் தொழிலக தரமுடைய உப்பை உற்பத்தி செய்துள்ளது. இது முந்தைய ஆண்டு உற்பத்தியை விட **3.96** % அதிகமாகும்.

2. **2018–19** ஆம் ஆண்டில், அதன் அதிகபட்ச விற்பனை அளவான **1,95,863** டன் தொழிலக தரமுடைய உப்பை விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இது கடந்த ஆண்டு **(2017–18)** விற்பனையை விட **17.15%** அதிகமாகும்.

3. **2018–19** ஆம் ஆண்டில் அதிகபட்ச விற்பனையாக **8,417** டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பை விற்பனை செய்துள்ளது. இது முந்தைய ஆண்டு விற்பனையை விட **203%** அதிகமாகும்.

### 7.6 தரச்சான்றிதழ்

இந்நிறுவனம் அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் IS **7224:2006** மற்றும் IS **16232:2014** அளவீட்டின்படி, உற்பத்தி செய்வதற்கு அனுமதி சான்றிதழ்கள் பெற்றுள்ளது. அத்துடன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்திட இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) சான்றிதழினையும் பெற்றுள்ளது. தொழிலக தரமுடைய உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை சிறந்த முறையில் உற்பத்தி செய்து வழங்குவதற்காக இதன் நிர்வாக அமைப்பின் தரம் மேம்படுத்தப்பட்டு தற்போது ISO **9001:2015** தரச்சான்றிதழை பெற்றுள்ளது.

## 7.7 புரோமின் தயாரித்தல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், சௌத் இந்தியா புரோமின் அன்டு அலைடு கெமிக்கல்ஸ், (SIBAC) தூத்துக்குடி என்ற நிறுவனத்துடன் இணைந்து உப்பு உற்பத்தியில் கிடைக்கும் பிட்டன் என்ற கழிவு நீரிலிருந்து புரோமின் உற்பத்தி செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. புரோமின் தயாரிப்பதற்காக மேற்கூறிய நிறுவனத்திற்கு இந்நிறுவனம் பிட்டன் வழங்குகிறது. இதற்கான தொழிற்சாலை வாலிநோக்கத்தில் மேற்கூறிய நிறுவனத்தால் (SIBAC) நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆண்டுக்கு சுமார் 10 இலட்சம் வருவாய் ஈட்டி வருகிறது.

## 7.8 தொழிலாளர் நல உதவிகள்

இந்நிறுவனத்தில் 1210 தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். இந்நிறுவனம் தொழிலாளர்களுக்கு கீழ்வரும் நல உதவிகளை வழங்குகின்றது.

1. இந்நிறுவனத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பணிக்காலத்தில் மரணமடைந்தால், அவரின் வாரிசுதாரருக்கு ரூ.1 இலட்சம் நிதி உதவி வழங்கப்படுகிறது.

2. தொழிலாளர்கள் பணிபுரிகின்ற இடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக 5 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவியுள்ளது.

3. தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி அவர்கள் அணிவதற்காக கருப்புநிற மூக்குக்கண்ணாடிகள், காலணிகள் மற்றும் மேல் துண்டு போன்றவை ஆண்டிற்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

4. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

## 7.9 காஞ்சிபுரம் மாவட்டத்தில் உப்பு உற்பத்தி தொடங்குதல்

தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு, அரசு ஆணை எண்.291 தேதி 10.08.2018–ன் படி காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் 3,010 ஏக்கர் நிலத்தினை அரசு வழங்கியுள்ளது. இந்நிலத்தினை இந்நிறுவனம் 25.04.2019 அன்று தன் வசம் பெற்றுள்ளது. இப்பகுதியில் உப்பு உற்பத்தி தொடங்குவதற்கான தற்பொழுதுள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஆலோசகரை நியமனம் செய்துள்ளது.

## 7.10 உப்பு தொழிலகங்களுக்கு முகவாண்மை அமைப்பு (Nodal Agency)

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தை தமிழகத்திலுள்ள உப்பு தொழிலகங்களுக்கு முகவாண்மை அமைப்பாக (Nodal Agency) அரசு ஆணை (நிலை)எண். 104, தொழில் (எம்.ஐ.எப்.2) துறை தேதி 14.09.2018–ன்படி அரசு நியமனம் செய்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழகத்திலுள்ள உப்பு உற்பத்தியாளர்களுடன் ஒருங்கிணைந்து நமது மாநிலத்தின் உப்பு உற்பத்தியினை உயர்த்திடுவதற்கான திட்டத்தினை முன் எடுத்து வருகின்றது.

## 7.11 2019–2020–ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

இந்நிறுவனம், நடப்பாண்டில் (2019–20) 2.25 இலட்சம் டன் தொழிலக தரமுடைய உப்பை உற்பத்தி செய்து, 2 இலட்சம் டன் உப்பை விற்பனை செய்வதை இலக்காக நிர்ணயித்துள்ளது. 2019–20 ஆம் ஆண்டில் அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு போன்ற செறிவூட்டப்பட்ட உப்புகளின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே 41,400 டன் மற்றும் 40,750 டன்னாக இலக்கு நிர்ணயித்துள்ளது. இதன்

மூலம், இந்நிறுவனத்தின் நடப்பாண்டு விற்று முதல் ரூபாய் **43** கோடியை எய்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.12 நிதிநிலை செயல்பாடு

இந்நிறுவனம் கடந்த ஆண்டில் **(2018–19)** ரூபாய் **3,757** இலட்சம் விற்றுமுதல் செய்து நிகர இலாபமாக ரூபாய் **19** இலட்சம் ஈட்டியுள்ளது.

**Blank**

## 8. சர்க்கரைத் துறை

சர்க்கரைத் தொழில், தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய வேளாண் சார்ந்த தொழில் என்ற வகையில், கிராமப்புற மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய பங்களிக்கிறது. இத்தொழில் துறையானது, கிராமப்புறத்து தொழிலாளர்களுக்கு பண்ணை முதல் தொழிற்சாலை வரை பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.

சில வருடங்களுக்கு முன்பு வரை தமிழ்நாடு, அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்யும் முதல் ஐந்து மாநிலங்களில் ஒன்றாக இருந்து வந்தது. சமீப காலங்களில், கரும்பு சாகுபடி பரப்பளவு மிகவும் குறைந்ததன் காரணமாக ஆலைகளின் திறன் பயன்பாடும் குறைந்துள்ளது. மாறிவரும் மழை அளவு, சர்க்கரை விலை குறைவு, கரும்பு ரகங்களின்வீரிய தன்மை இழப்பு, சர்க்கரைக் கட்டுமானக் குறைவு, கரும்பு விலை நிலுவைத்தொகை அதிகரிப்பு ஆகியவை சாகுபடி பரப்பளவு குறைவதற்கான முக்கிய காரணங்களாகும். எனவே, கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை அதிகரிக்க புதிய கரும்பு இரகங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் நீர்ப்பயன்பாட்டை முறைப்படுத்த நுண்ணீர் பாசனத்தை

கடைப்பிடித்தல் போன்றவை மூலம் விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

**8.1 நிர்வாகக் கட்டமைப்பு**

தமிழ்நாட்டில் சர்க்கரைத் துறையானது 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளையும் 2 பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகளையும் 24 தனியார் சர்க்கரை ஆலைகளையும் ஆக மொத்தம் 42 சர்க்கரை ஆலைகளை உள்ளடக்கியதாகும்.

**8.1.2 சர்க்கரைத்துறை இயக்ககம்**

சர்க்கரைத்துறை ஆணையர் மாநிலத்தின் சர்க்கரைத் துறை தலைவராகவும், கரும்பு ஆணையராகவும் உள்ளார். துறைத்தலைவராக இருக்கும் சர்க்கரைத் துறை ஆணையர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை பொறுத்தமட்டில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983–ன்படி செயல் பதிவாளராகவும் உள்ளார்.

**8.1.3 தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்**

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் 1974 ஆம் ஆண்டில், நிறுமச் சட்டம் (1956)ன் கீழ் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் நிறுவப்பட்டதன் முக்கிய

நோக்கமானது, புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல், ஏற்கனவே உள்ள சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்தல் மற்றும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் உப பொருட்களைக் கொண்டு திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குவதுமாகும்.

தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தமிழ்நாடு சர்க்கரை கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. பெரம்பலூர் மாவட்டம் எறையூரிலுள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலை தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் துணை நிறுவனமாகும்.

### 8.1.4 தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் லிமிடெட்

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையமானது சர்க்கரைத் துறை ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் தலைமைக் கூட்டுறவு நிறுவனமாக, அங்கத்தினர் ஆலைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட்டு வருகிறது. இதனுடைய முதன்மை பணி அங்கத்தினர் ஆலைகளுக்கு தொழில்நுட்ப

ஆலோசனைகள் வழங்குதல், வேதிப்பொருட்கள், கோணிப்பைகள், சுண்ணாம்பு மற்றும் மசகு எண்ணெய், பேரிங்குங்கள் போன்றவற்றை ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அங்கத்தினர் ஆலைகளால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை மற்றும் உப உற்பத்தி பொருட்களை மொத்த விற்பனை செய்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் அலகான உயிரியல் ஆய்வு மையமானது அங்கத்தினர் ஆலைகளின் கரும்பு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான அசிட்டோபாக்டர், பாஸ்போபேக்டரியம், டி.விரிடி., சூடோமோனாஸ், பயோஇனாகுலம், மைக்கோரைசா, மெட்டாரைசியம், ஜி.வைரஸ் போன்ற உயிர் உரங்கள் மற்றும் உயிர் பூச்சி கொல்லிகளை உற்பத்தி செய்து வருகிறது.

## 8.2 கரும்பு சாகுபடியும் இயந்திரமயமாக்கலும்

தமிழ்நாட்டில் சர்க்கரைத்தொழிலானது, கரும்பு ரகங்களின் வீரிய தன்மை குறைவது, அதிக சர்க்கரை சத்துள்ள Co86032 கரும்பு ரகத்திற்கு இணையான அல்லது அதிக

அனுகூலங்களை கொண்ட ரகங்கள் இல்லாமல் இருப்பது, பருவ மழை குறைவு, காலம் கடந்த கரும்பு பணப்பட்டுவாடா, சர்க்கரை விலை வீழ்ச்சி மற்றும் கரும்பு சாகுபடிக்கு தேவையான கூலி ஆட்கள் தட்டுபாடு, ஆகிய மிக முக்கியமான காரணங்களால் சராசரி மகசூல் குறைவு மற்றும் குறைவான சர்க்கரை கட்டுமானம் போன்ற கடுமையான நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. மேலும், குறைவான இலாப அளவு, அதிகரித்து வரும் கூலி மற்றும் இடுபொருள் செலவுகள் மற்றும் மகசூல் குறைவு ஆகிய காரணங்களால் கரும்பு சாகுபடியாளர்களின் ஆர்வம் குறைந்து வருகிறது.

கரும்பு உற்பத்தித்திறனை அதிகப்படுத்தவும் சாகுபடி செலவினங்களை குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்களின் அடிப்படையில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பருசீவல் நாற்றுகளை நடவு செய்வதற்கான மானியம், நிழல்வலைக்கூடங்களை அமைத்து தரமான நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கு மானியம், திசு வளர்ப்பு நாற்றுகளுக்கான மானியம், விதைக்கரும்புகளைக் கரும்பு இனப்பெருக்க நிறுவனம் மற்றும் தமிழ்நாடு

வேளாண்மை பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் ஆகியவற்றிலிருந்து கொள்முதல் செய்வதற்கும் புத்தாக்கப்பட்ட Co86032 ரக விதைக் கரும்பு மற்றும் புதிய ரக கரும்பு ரகங்களின் வல்லுநர் விதைக்கரும்புகளை கொள்முதல் செய்வதற்கும் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பிரதம மந்திரியின் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசன திட்டத்தை நிறுவுவதற்கு ஏதுவாகவும் மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவையன்றி, ஒவ்வொரு சர்க்கரை ஆலைப்பகுதிக்கும் பொருத்தமான கரும்பு ரகங்களை தேர்வு செய்யும் பொருட்டு அச்சூழ்நிலைகளுக்கு ஏற்ற ரகங்களை கண்டறிய கரும்பு இனப்பெருக்க நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மாநில அளவில் வெவ்வேறு பகுதிகளில் **6** ரக மாதிரி வயல்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் கரும்பு இனப்பெருக்க நிறுவனத்தின் ரக வாரியான பரிசோதனை ஆய்வுகள் முடிவின்படி Co11015 என்ற கரும்பு ரகம் உயர்வான ரகம் என கண்டறியப்பட்டுள்ளது. தற்போதுள்ள Co86032 ரகத்தின் வல்லுநர் விதைக் கரும்பு,

கரும்பு இனப் பெருக்க நிறுவனம் கோயம்புத்தூரிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு 413 ஏக்கர் பரப்பளவில் நாற்றங்காலாக கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆறு மாதங்களில் 4000 ஏக்கர் பரப்பளவில் நடவு செய்யப்படும். மேலும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 2 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் இந்த ரகம் நடவு செய்யப்படும்.

கரும்பு ஒரு வருடாந்திர பயிராகவும் நடவுக்கரும்பு அறுவடைக்குப்பிறகு மறுதாம்புக் கரும்பாகவும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கரும்பு சாகுபடிக்கு அதிகமாக கூலி ஆட்கள் தேவைப்படுவதால் கரும்பு விவசாயிகள் அதிக சாகுபடி செலவினங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. துரித தொழில் மயமாக்கம் மற்றும் நகரமயமாதலால் வேளாண் பணிகளுக்கு கூலி ஆட்கள் கிடைப்பது சில வருடங்களாக குறைந்து வருகிறது. இதனால் கரும்பு சாகுபடியில் நிலம் தயாரித்தல், நடவு செய்ய பார்கள் அமைத்தல், கரும்பு நடவு, களை எடுத்தல், மண் அணைத்தல், சோகை உரித்தல், கரும்பு அறுவடை செய்தல், கட்டை சீவுதல், பார்களை சரிசெய்தல் ஆகிய சாகுபடி பணிகளுக்கு இயந்திரமயமாதல் அவசியமாகிறது.

வேளாண் தொழிலாளர்கள் தட்டுப்பாடு மற்றும் அதிக செலவினங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மற்றும் வேளாண் இயந்திர மயமாக்கும் துணை இயக்கம் ஆகியவற்றின் கீழ் பண்ணை இயந்திரங்களை மானிய விலையில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 8.3 சர்க்கரை உற்பத்தி மற்றும் விற்பனை

#### 8.3.1 சர்க்கரை உற்பத்தி

கடந்த **31.3.2019** உடன் முடிவடைந்த **2018–19** ஆம் வருடத்திற்கானஅரவைப் பருவத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகள் மூலம் **71.07** இலட்சம் மெ.டன் கரும்பினை அரவை செய்து **9.03** சதவீத கட்டுமானத்துடன் **6.42** இலட்சம் மெ.டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை மற்றும் பிற உப பொருட்கள் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த **31.3.2019** உடன் முடிவடைந்த **2018–19** ஆம் ஆண்டிற்கான அரவைப்பருவத்தில் சுமார் **1.15** இலட்சம் டன் சர்க்கரை

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மூலம் ரூ.**383.14** கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 8.3.2 கரும்பு கிரயத் தொகை

கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு கிரயத் தொகை வழங்கவும், சர்க்கரை ஆலைகளை நலிவடைவதிலிருந்து மீட்கவும், புதிய விலைக் கொள்கை ஒன்றை தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன்படி சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படும் சர்க்கரை மற்றும் முதன்மை உப பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிப்பதன் மூலம் விவசாயிகள் ஆலைக்கு அனுப்பிய கரும்பிற்குரிய நியாயமான மற்றும் ஆதாய விலை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு **2018–19** ஆம் ஆண்டு தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் **2016–17** ஆம் ஆண்டிற்கான அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்பட்ட கரும்பிற்கான வித்தியாசத் தொகை ரூபாய் **200** அதாவது மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நியாயமான மற்றும் ஆதாய விலை ரூபாய் **2,550** மற்றும் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட

மாநில அரசின் பரிந்துரை விலை ரூபாய் **2,750**, இடைநிலை உற்பத்திக்கான ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் கடந்த **31.05.2019** வரை ரூ.**134.53** கோடி இடைநிலை உற்பத்தி ஊக்கத்தொகை தகுதிவாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரிடையாக அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாக, **2018–2019**–ஆம் பருவத்திற்கு மத்திய அரசு **9.5** சதவிதம் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.**2612.50** என அறிவித்துள்ள நிலையில் **2019–20**ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், ரூ.**200** கோடி, **2018–2019**–ம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.**137.50** வீதம் வழங்கும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.4 சர்க்கரை ஆலைகளின் உப உற்பத்தி பொருட்கள்

#### 8.4.1 கரும்புச் சக்கை

சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படும் உபப் பொருட்களில் கரும்புச் சக்கை முதன்மையானதாகும். ஆலையின் இயக்கத்திற்கு தேவையான நீராவி மற்றும் மின் உற்பத்தி போக எஞ்சிய கரும்பு சக்கையானது காகித தொழிற்சாலை மற்றும் உயிர் எரிசக்தி அலகுகளில் பயன்படுத்தப்படுகிறது. **2018–19** ஆம் ஆண்டின் **31.3.2019**

வரையிலான காலத்தில் **61,214** மெ.டன்கள் கரும்புச் சக்கையானது ரூ.**12** கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 8.4.2 கரும்புச்சாற்று கசண்டு

சர்க்கரை ஆலைகளின் உப உற்பத்தி பொருளான கரும்புச்சாற்று கசண்டு, எரிசாராயம், வேதிப்பொருட்கள் மற்றும் கால்நடை தீவனங்கள் உற்பத்தியில் மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது. அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலுள்ள வடிப்பாலைகள் பிற கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் கரும்புச்சாற்றுக் கசண்டினை தங்களுடைய வடிப்பாலைகளில் பயன்படுத்தி வருகின்றன. இது தவிர உபரி கரும்புச்சாற்றுக் கசண்டு தனியார் வடிப்பாலைகள், வேதிப்பொருட்கள் மற்றும் கால்நடை தீவன உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

**2018–2019** ஆம் நிதியாண்டில் **31.3.2019** வரையிலான காலத்தில் **1.45** இலட்சம் மெ.டன் கரும்புச்சாற்றுக் கசண்டு விற்பனை செய்யப்பட்டு ரூ.**90.58** கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 8.4.3 வடிப்பாலைகள்

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள வடிப்பாலைகள் **2018–2019** ஆம் நிதியாண்டில் **159.21** இலட்சம் லிட்டர் எரிசாராயம் விற்பனை செய்து ரூ.**59.74** கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலுள்ள வடிப்பாலைகள் **2018–2019** ஆம் நிதியாண்டில் **15.11** இலட்சம் லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்து ரூ.**6.32** கோடிக்கு விற்பனை செய்து வருவாய் ஈட்டியுள்ளன.

### 8.5 இணைமின் திட்டம் மற்றும் ஆலை நவீனமயமாக்கல்

எம்.ஆர்.கே மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் **7.5** மெ.வாட் மற்றும் **5.**மெ.வாட் திறனுடைய இணைமின் நிலையங்கள் முன்பே நிறுவப்பட்டுள்ளன. **2018–2019** ஆம் நிதியாண்டில் உபரி மின்சாரம் ரூபாய் **1.16** கோடிக்கு மாநில மின் தொகுப்பின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், **10** கூட்டுறவு மற்றும் **2** பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் இணைமின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க அரசு முடிவு செய்தது. ஆலைகளில மின்சாரம்

மற்றும் நீராவி பயன்பாட்டினை குறைத்து மின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மேற்படி இணைமின் உற்பத்தி திட்டத்துடன் ஆலை இயந்திரங்கள் நவீன மயமாக்கும் பணிகளும் திட்டமிடப்பட்டது. இத்திட்டம் செங்கல்ராயன், வேலூர், செய்யார், அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது. 2018–19 ஆம் நிதியாண்டில் இந்த 5 ஆலைகளும் 481.55 இலட்சம் யூனிட் மின்சாரத்தை மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை (15 மெ.வாட்) மற்றும் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைகளில் (15 மெ.வாட்) இணைமின் உற்பத்தி நிலையம் மற்றும் ஆலை நவீனமயமாக்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.02.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

ஆலை நவீனமயமாக்கும் திட்டம் சேலம், சுப்ரமணிய சிவா, தர்மபுரி, கள்ளக்குறிச்சி–1, கள்ளக்குறிச்சி–2, செங்கல்ராயன், வேலூர், செய்யார், அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் ஆகிய 10 ஆலைகளில் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**எம்.சி.சம்பத்**
**தொழில் துறை அமைச்சர்**